8393

சுந்தரர்

8393.
ACL-FTS
0020H
8393.

மதுரை
ஸெயிண்டுமேரி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
மு. கோவிந்தசாமி ஐயர்
எழுதியது.

THE MADURA TAMIL SANGAM
8393

பிரசுர கர்த்தர்:
கோபாலகிருஷ்ணக் கோன்,
மதுரை & சென்னை.

உரிமைப்பதிவு] 1933 [விலை அணு, 5.

PRINTED AT THE EXCELSIOR POWER PRESS,
MADURA.

முன்னுரை

ஒரு நாட்டு மக்கள் அந்நாட்டு ஒழுக்க முறை யறிந்துநடக்க இன்றியமையாது நின்றுஅவர்களுக்குத்துணை புரிவன அந்நாட்டினிற் பண்டைக் காலத்துத் திகழ்ந்த பெருமக்களின்சரிதங்களே யாகு மென்பது அறிஞர் பலரும் ஒப்புக்கொண்டுள்ள கொள்கையாம். ஆதலின், தமிழ் நாடு செய்த பெருந் தவப் பயனாகத் தோன்றி அரும் பெருஞ்செயல்களாற்றித் தம் புகழுடம்பை நிலைபெறச் செய்த பெரியோர் பலர் சரிதைகளைத் தமிழ் பயிலும் மாணவர் பலரும் மன மகிழ்ந்து கற்றுப் பயனடையுமாறு சில நூல் எழுதுவித்து வெளிப்படுத்தல்நலமாமெனக்கருதி அம்முறையில் இந்நூல் எழுதி வெளிப்படுத்தப் பட்டமையின், அன்பர்கள் இதனை யாதரிக்க வேண்டுகிறோம்.

பிரசுர கர்த்தர்.

பொருள் அடக்கம்

பொருள்	பக்கம்
1. திருவவதாரமும் திருமணப் பேச்சும்	7
2. தடுத்தாட் கொள்ளப்பெறுதல்	9
3. தேவாரம் பாடத் திருவருள் பெறுதல்	14
4. முடியில் திருவடி சூட்டப் பெறுதல்	17
5. திருவாரூர் அடைதல்	18
6. பரவையார் திருமணம்	21
7. நெற்குவை யெடுக்க ஆள் வேண்டிப் பெறுதல்	24
8. செங்கல் பொற்கல் ஆதல்	27
9. ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தல்	29
10. இறைவர் பொதி சோறு கொடுத்தல்	34
11. தொண்டை நாட்டுத் தலங்களுக்குப் போய்த் திருவொற்றியூர் அடைதல்	35
12. சங்கிலியார் வரலாறு	37
13. சங்கிலியாரை மணத்தல்	39
14. கண்ணிழந்து பெறுதல்	43
15. தொண்டர் நாதரைத் தூது விடுதல்	47
16. ஏயர்கோன் கலிக்காம நாயனரைச் சந்தித்தல்	53
17. சேரமான் பெருமாள் சிநேகம் பெறுதல்	56
18. பாண்டிப்பதிகள் பாசுதல்	59
19. காவேரி வழி விடல்	61
20. வேடுவர் பறி	62
21. முதலையுண்ட பாலனை யழைத்தல்	65
22. வெள்ளானையேறி வெள்ளி வெற்படைதல்	67

உ

முருகன் துணை.

சுந்தரர்

---

1. திருவவதாரமும் திருமணப் பேச்சும்.

பூமியிலே புண்ணிய பூமியாகிய பாத கண்டத்தில், தமிழ் வழங்கும் நாடாகிய தென்னாட்டில், திருமுனைப் பாடி என்னும் நாட்டில், திருநாவலூர் என்றொரு திருப் பதியுளது. அதில் ஆதிசைவராகிய சடையனார் என்னும் சிவப்பிராமணர், இசை ஞானியார் என்னும் தரும பத்தினியாருடன் இல்லறம் நடத்திவந்தார். அவர்கள், புரிந்து வந்த அருந்தவப் பயனாக, அவர்களுக்கோர் ஆண்மக வுண்டாயிற்று. அக்குழந்தைக்கு நம்பியாரூரர் என்று நாம கரணம் செய்தார்கள்.

அப்பிள்ளையார் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறைச் சந்திரனைப்போல வளர்ந்து வந்தார். ஒரு நாள் அவர் தம் தோழர்களுடன் வீதியில் சிறு தேர் உருட்டி விளையாடிக்கொண் டிருக்கும் பொழுது, அந்நாட்டு அரசராகிய நரசிங்க முனையார்,

அப்பிள்ளையாரின் அழகில் ஈடுபட்டு, அவரைத் தம் அரண்மனைக்குக் கொண்டுபோய் வளர்த்து வரவேண்டுமென ஆசைகொண்டார்; இருமுது குரவரின் சம்மதத்தைப் பெறவேண்டிச் சடையனாரிடம் சென்று, தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார். அவருமதற்கு ஒருவாறு இணங்கப் பிள்ளையாரை அரசர் தமதுஅரமனைக்கு அழைத்துப்போய், அபிமான புத்திரராக வளர்த்து வந்தார். நம்பியாரூரர் அரசர் வீட்டில் வளர்ந்து வந்தாரேனும், தம் குல ஒழுக்கத்தில் சிறிதும் குறைவுபடாது ஒழுகி வந்தார்; தக்க வயதில் உபநயனம் செய்விக்கப் பெற்றார்; வேதங்களை அத்தியயனம் பண்ணினார்; சகல கலைகளையும் ஐயந் திரிபறக் கற்றுணர்ந்து, வல்லவராயினார். இவ்வளவில் அவருக்கு விவாகம் செய்தற்கேற்ற பருவமும் வந்தடுத்தது.

அது கண்டு தந்தையார் தம் குலாசாரங்களுக்கு ஏற்றவிடத்தில் சம்பந்தம் செய்ய வேண்டுமெனக்கருதி, தம் மைந்தர்க்கு ஏற்ற பெண் எங்குள்ளாள் என விசாரிக்கலாயினர்; திருப்புத்தூரில் தமக்கு உறவினரும் சிவபக்தியிற் சிறந்தவருமான சடங்கவி சிவாசாரியர்க்கு ஒரு பெண் இருக்கிறாள் எனக் கேள்விப்பட்டார்; உடனே அவர்பால் சில முதியோர்களை அப்பெண்ணை மணம்பேசி வரும்படி உய்த்தனர். அவர்களும் ஆங்கடைந்து, சடங்கவி சிவாசாரியரிடம் தெரிவிக்க, அவரும் மிகுந்த சந்தோஷத்துடன் இசைந்தனர். உடனே அவர்கள் மீண்டு வந்து, சடங்கவி சிவாசாரியர் இசைந்தமையைத் தெரிவித்தார்கள். விவாகத்துக்குச் சுபமுகூர்த்தமும் நிச்சயிக்கப்பெற்றது.

2. தடுத்தாட் கொள்ளப்பெறுதல்.

உற்ருர் உறவினர் யாவர்க்கும் திருமணப் பத்திரம் அனுப்பப்பட்டது. விவாகத்துக்கு முந்தின தினத்திலே நம்பியாரூரர் சமாவர்த்தனம் பண்ணிக் கீாப்பிட்டுக்கொண்டு, நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துச் சர்வாலங்காரத்துடன் பந்துக்கள் ஞானிகள் பின்பற்றி வரக் குதிரைமேற்கொண்டு சென்று, புத்தூரடைந்து, திருமணப் பந்தருக்கு முன் வந்து, குதிரையினின் றிழிந்து, உள்ளேபோய், ஆசனத்தில் எழுந்தருளியிருந் தார்.

அப்பொழுது சிவபெருமான், வயது முதிர்ந்த ஓர் அந்தணர் வடிவங் கொண்டு, அவ்விடத்திலே வந்து நின்று, "இங்கே கூடியுள்ள வேதியர்களே, யான் இங்குக் கூற வேண்டுவது ஒன்றுளது. அதை நீவிர் எல்லீரும் கேட்க வேண்டும்," என்ருர்.

சபையோர், "பெரியீர், நீர் கூறுவது யாதோ?" எனக் கேட்டனர்.

பெரியார், நம்பியாரூரரை நோக்கி, "உனக்கும் எனக்கும் ஒரு வழக்கு இருக்கின்றது. அதைத் தீர்த்துக்கொண்டுதான் நீ விவாகம் செய்துகொள்ள வேண்டும்," என்ருர்.

நம்பியாரூரர், "என்ன! நம்மிருவருக்கும் வழக்கா? அஃது யாது? சொன்மின். அதை முடித்துக் கொண்டுதான் மணம் புரிவேன்," என்ருர்.

சிவபெருமானுகிய முதியோர், அவையோரை நோக்கி, "ஐயன்மீர், மணக் கோலம் பூண்டு இங்கு

இருக்கும் திருநாவலூரானாகிய இந்த நம்பியாரூரன் எனக்கு அடியவன்,'' என்றார்.

நம்பியாரூரர், ''என்ன! நான் உமக்கு அடிமையா? நன்றாயிருக்கின்றது!'' என்று சொல்லி நகைத்தார்.

வேதியர் வடிவம் கொண்ட ஈசுவரர், நம்பியாரூரரை யண்மி, ''அப்பா, பரிகசிப்பதில் பயனில்லை. அந்நாளில் உன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமைச் சீட்டு இதோ உளது,'' என்றார்.

நம்பியாரூரர், ''பிராமணருக்குப் பிராமணர் அடிமையா? நுமது வார்த்தை வெகு அழகாயிருக்கின்றது! இதுவரை யாம் இதனைக் கேட்டறியோம்! நீர் என்ன பித்தரோ?'' என்றார்.

ஐயர், ''யான் பித்தனாயினும், ஆகுக; அன்றிப் பேயனாயினும், ஆகுக. நீ இன்னும் என்னை எத்தனை நிந்தித்தாலும் சரி. அதனால், யான் சிறிதும் வெள்கேன். என்னை நீ அறிந்தாயில்லை. வீண் விளையாட்டுப் பேச்சில் காரியமில்லை. எழுந்திரு;வா, அடிமைத்தொழில் புரிய,'' என்றார்.

நம்பியாரூரர், ''உம்மிடம் அடிமை ஓலை இருக்கின்றதா? காட்டுமின்; பார்ப்போம்,'' என்றார்.

வேதியர், ''நீ அதைப் பார்த்தற்குரிய யோக்கியதையுடையவன் அல்லை; அடிமைத் தொழில் புரிதற்கே உரியை. அதனை இச்சபையோர்க்குக் காட்டி மெய்ப்பித்து, நின்னையான் அடிமைகொள்வல்,'' எனப் பகர்ந்தார்.

திருநாவலூரார் சீற்றம் கொண்டு, அவர் கையில் இருந்த ஓலையைப் பறித்துக் கிழிக்க முயலுகையில், முதிய வேதியர் ஓடத் தொடங்கினர். நம்பியாரூரர் அவரைப் பின்தொடர்ந்து ஓடி அவர் கையிலுள்ள ஓலையைப் பறித்துக் கிழித்தெறிந்தனர். வேதியர் அவரைப் பற்றிக்கொண்டு, "இது முறையோ? இது தகுமோ? இது தருமந்தானோ?" என்று சத்தமிட்டார்.

பாங்கிலிருந்த பிராமணர்கள் அவர்கள் இருவரையும் விலக்கி, "பிராமணரே, நீர் கூறுவது உலகத்தில் என்றும் இல்லாததாயிருக்கின்றது! நீரோ, வழக்காடுகின்றீர். உம் ஊர் யாது? நீர் எங்குள்ளவர்?" என்று கேட்டார்கள்.

"ஐயன்மீர், எனது இருப்பிடம் திருவெண்ணெய் நல்லூர். இவன் என்கை ஓலையைப்பறித்துக் கிழித்ததனாலேயே என் கூற்று மெய்யென்பது வெளியாகும்," என விளம்பினர் விருத்த வேதியர்.

"நீர் இருப்பது திருவெண்ணெய் நல்லூராயின், இவ்வழக்கை அங்கே சென்று தீர்த்துக்கொள்வோம்; வாரும்," என்றார் நம்பியாரூரர்.

"திருவெண்ணெய் நல்லூரிலுள்ள வேதியர்கள் முன்பு என்னுடைய மூல ஓலையைக் காட்டி, நீ அடிமையென்பதைத் தாபித்துக்கொள்கிறேன். வா, அங்கே," என்று சொல்லி வயோதிகரும் தடியை ஊன்றிக்கொண்டு முன்னடந்தார். நம்பியாரூரரும் பின் சென்றார். இதன் உண்மையை அறிவான் வேண்டி, ஏனைய பிராமணர்களும் அவர்களைப் பின்பற்றிப் போனார்கள்.

சிவபெருமானுகிய வேதியர், திருவெண்ணெய் நல்லூரை அடைந்து, ஆங்குள்ள அந்தணச் சிரேட்டர்களைக் கூட்டுவித்து, "அறிவிற் சிறந்த ஆன்றோர்களே, இவ்வாரூரன் எனக்கு இவன் அடிமையென யான்காட்டிய ஓலையைக் கிழித்தெறிந்துவிட்டு, உங்கள் பால் வந்திருக்கிறுன். நீங்கள் அதன் உண்மையை விசாரித்து, முடிவு செய்ய வேண்டும்," என்று முறையிட்டார்.

அது கேட்ட அந்தணர்கள், "ஈதென்ன புதுமை! ஓர் அந்தணர் மற்றோர் அந்தணருக்கு அடிமையாதலை இதுவரை கேட்டறியோமே! நீர் சொல்வது தவறு," என்றூர்கள்.

ஐயர், "ஐயன்மீர், நீவிர் இவ்விதம்எண்ணல்முறையன்று. யான் பொய்வழக்குத் தொடுத்துவந்தேன் அல்லேன். யான் கொணர்ந்தது மெய் வழக்கே. இவன் பாட்டன், தானும், தன் வழியிேனரும் வழி வழியாக எனக்கு அடிமையென்று எழுதிக் கொடுத்த ஓலையை யான் காட்ட, அதனை இவன் கிழித்துவிட்டு வாதாடுகிறுன்," என்றூர்.

பிராமணர்கள், திருநாவலூாரை நோக்கி, "உம்முடைய பாட்டன் எழுதிக்கொடுத்த ஓலையென்று இவர் காட்டினுல், நீர் அதனைப் பறித்துக் கிழிப்பது என்ன முறை? அதனுல் நும் பக்கம் வெற்றி யேற்படும்என்று எண்ணினீரோ? பெரியவர் பேசுவது நியாயமாகவே தோன்றுகிறது. உம்முடைய தடையாது?" என்று கேட்டார்கள்.

நம்பியாரூரர், "சாத்திரம் வல்ல சபையோர்களே, யான் ஓர் ஆதிசைவன் என்பதை நீங்கள் அனைவர்களும்

அறிவீர்கள். அப்படியிருக்க, யான் இவருக்கு அடிமையென்றால், அஃது எவ்வாறு பொருந்தும்? நீங்களே எண்ணிப் பாருங்கள்," என்றார்.

அச்சபையோர், விருத்தாப்பிய வடிவத்தோடுவந்து நின்ற வேதியரைப் பார்த்து, "வேதியரே, இவ்வுலகத்தில் ஒரு வழக்கை மெய்யென நிரூபிக்க, அனுபவம், எழுத்து, சாக்ஷி ஆகிய மூன்றிருக்கவேண்டும். இவ்வாரூரான் உமக்கு அடிமை யென்பதற்கு இம்மூன்று ஆதாரங்களில் ஏதேனும் ஒன்றுவது இருக்கின்றதா? இருக்குமாயின், உம்முடைய விவகாரத்தை யாம் ஏற்றுக் கொள்ளக்கூடும்," என்றனர்.

உடனே ஐயர், "ஐயன்மீர், இவன் முன் கிழித்த ஓலை என்னிடத்தில் இதோ இருக்கின்ற மூல ஓலையைப் பார்த்து எழுதிய படி ஓலை. இதனை நோக்குமின்," என்றார்.

சபையோர்கள், "அதை எடும்; பார்ப்போம்," என்றார்கள்.

ஐயர், "எனக்கு மிகவும் அச்சமாயிருக்கின்றது. இதையும் பறித்து இவன் கிழித்து விடுவானாயின், என் செய்வேன்? நீங்கள் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்வீர்களாயின், காண்பிக்கின்றேன்," என்றார்.

சபையோர்கள், "வேதியரே, நீவிர் அஞ்சன்மின். யாங்கள் அவ்வோலைக்குப் பழுதுண்டாகாதபடி பார்த்துக்கொள்ளுகிறோம். அதை எமக்குக் காட்டும்," என்று கேட்க, அவரும் மூல ஓலையைக் கையில் எடுத்தார். சபையோர்களின் ஆக்ஞைப்படி, ஒரு கருணன் அவ்

வோலையை வாங்கிச் சுருளைப் பிரித்துப் படிக்க லாயி னன். அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"திருநாவலூரி லுள்ள ஆதி சைவனாகிய ஆரூரன் என்கின்ற யானும், என் சந்ததியார்களும், திருவெண் ணெய் நல்லூரிலுள்ள பித்தருக்கு வழித்தொண்டு செய்ய யான் உள்ளும் புறமும் ஒப்ப உடன்பட்டு எழுதிக் கொடுத்தது. இப்படி, ஆரூரன்."

சபையோர்கள் இதனைக் கேட்டார்கள். ஓலையில் சாக்ஷிகளாகக் கையொப்ப மிட்டவர்களும் தங்கள் எழுத்துத்தான் என ஒப்புக்கொண்டார்கள். பின்னும் சபையோர்கள் நம்பியாரூரரை நோக்கி, "இது நும் பாட் டன் கையெழுத்துத்தானா? பாரும்," என்றார்கள். ஐயர் அதனைக்கேட்டு, "இவன் சிறியன். இவன் யாதறி வான்? இவன் பாட்டன்கைச்சாத்து வேறு ஏதேனும் உளதாயின், அதனை வருவித்து, ஒத்துப் பாருங்கள்," என்றார். அவர்களும் அவ்வாறு செய்ய, அதுவும் ஒத் திருந்தது. உடனே சபையோர்கள் நம்பியாரூரரை வேதியர்க்கு அடிமை என்றே தீர்மானம் செய்தார்கள். அவரும் மறுக்க இடமின்றி, அதற்கு உடன்பட்டார்.

3. தேவாரம் பாடத் திருவருள் பெறுதல்.

சபையோர்கள்வேதியரை நோக்கி, "நீர் இவ்வூரில் உள்ளவர் என்று ஓலையில் எழுதப்பட்டுளதே! அப்படி யாயின், உம்முடைய வீடு முதலியவை எங்குள்ளன?" என்று கேட்க, ஈசுவரர், "நீவிர் அவற்றை அறியீரோ? ஆயின், என்னுடன் வம்மின். அதனை யான் காட்டு வல்," என்று சொல்லி, நம்பியாரூரர் முதலானவர்களை

உடனழைத்துக்கொண்டு, அவ்வூரி லுள்ள திருவருட்டுறை என்னும் ஆலயத்தினுள்ளே புகுந்தார். உடனே அவரைப் பின்பற்றிச் சென்றவர்கள் தங்களுடன் வந்த முதியோரைக் காணாது திகைத்து நின்றார்கள்.

நம்பியாரூரர், தம்மை ஆட்கொண்ட அந்தணர் பெருமான் கோவிலினுள்ளே புகுந்து மறைந்தமையைக் கண்டு, ஆச்சரிய முற்று, அவரை அழைக்க லாயினார். உடனே சிவபெருமான் உமாதேவியுடன் இடபாரூடராய்க் காட்சி தந்து, "நம்பியாரூர, நீ முன்னே நமக்குத் திருக்கைலையில் தொண்டுபுரிந்துவந்தாய். நீதான் நமக்கு ஆங்கு விபூதி வட்டைத் தாங்குபவனா யிருந்தாய். ஒரு நாள் நீ நமக்குத் தொடுத்தணியப் பூப்பறிப்பதற்கு நந்தவனத்திற்குச் சென்றிருந்தபோது, ஆங்கு அதே பணிக்காக வந்திருந்த பார்வதியின் சேடியர்களாகிய அனிந்திதை கமலினி என்னும் மாதர்கள்மீது நீ காதல் கொண்டமையால், அவர்களை மணக்கும் பொருட்டு நின்னைத் தென்பூமியிலே மானுடதேகங்கொண்டு பிறக்கும்படி ஆக்ஞையிட்டோம். அதன்படி நீ இப்பொழுது பிறந்திருக்கிறாய். நின்னை அங்குள்ளார் சுந்தரன் என்றழைப்பார். நின்னைச் சமுசார பந்தம் தொடர்ந்து துன்புறுத்தாதிருக்க, நாம் வலிய வந்தாண்டோம்," என்று கூறியருளினார்.

இத்திருவாக்கைக் கேட்டுச் சுந்தரர் மெய்சிலிர்ப்ப இரு கண்களினின்றும் ஆனந்த நீர் பொழிய நின்று, "இறைவீர், நாயேனை ஒரு பொருளென எண்ணி வலிய வந்தாண்ட அருட்டிறத்தை என்னெனப் புகழ்வேன்! தேவரீர் கருணைதான் என்னே!" எனத் தொழுது நின்றார்.

அப்பொழுது சிவபெருமான், "நீ மணக் கோலம் பூண்டிருந்த காலை நம்மைச் சொல்லத்தகாத வன்சொற் களைச் சொல்லி இகழ்ந்தனை. ஆதலால், இன்று முதல், நின்னை வன்றொண்டன் என உலகோர் அழைக்கக் கட வர். நீ நமக்கு அன்போடு செய்யத் தக்க அருச்சனை பைந்தமிழ்ப் பாடல்களேயாம். ஆகையால், இனி நம் மை வண்டமிழ்ப்பாடல்களால் பரவி வணங்குவாயாக," என்றார்.

நம்பியாரூரர், "இறைவீர், உம்முடைய அநந்த கோடி கலியாண குணங்களில் ஏழையேன் எதை அறி வேன்? என்ன சொல்லிப் பாடுவேன்? அடியேனுக்கு அத்தகைய ஆற்றல் ஒரு சிறிதும் இல்லையே!" என ஏங்கித் தொழுதார்.

கருணையங்கடலாகிய கண்ணுதலார், "நீ முன்னே எம்மைப் 'பித்தன்' என்று கூறினை யாதலால், எம்மைப் பித்தனென்றே பாடு," என்று கட்டளையிட்டருளினர். உடனே கடவுள் திருவருளால், சுந்தரர்,

"பித்தா!பிறை சூடீ!பெரு மானே!அரு ளாளா!
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை.
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய் நல்லூ
[ருட் டுறையுள்
அத்தா!உனக் காளாயினி யல்லேனென லாமே?"

என்னும் திருப்பாசுரத்தை முதலாகக்கொண்ட திருப் பதிகத்தைப் பாடியருளினர். பின்பு திரிபுராந்தகர் சுந் தரரை நோக்கி, "தொண்டனே, இவ்வாறே நீ எப்பொ ழுதும் நம்புகழை வண்டமிழ்ப் பாடலால் பாடி வருவா

யாக,'' என்று ஆணையிட்டுத் திருவுருக் கரந்தருளினார். இது நிற்க.

திருப்புத்தூரில் சடங்கவி சிவாசாரியருடைய புத்திரி, தன் விவாகம் நடைபெறுமையைக் கண்டு, நம்பியாரூரரையே தியானம் செய்துகொண்டிருந்து, வேறு விவாகம் புரிந்துகொள்ளாது, காலத்தைக் கழித்துச் சிவபத மடைந்தனள்.

4. முடியில் திருவடி சூட்டப் பெறுதல்.

பிறகு, சுந்தரர் திருவெண்ணெய் நல்லூரினின்றும் நீங்கித் தாம் பிறந்த ஊராகிய திருநாவலூருக்குச் சென்று, கடவுளை வணங்கித் தேவாரம் பாடித் திருத்துறையூர் முதலான க்ஷேத்திரங்களை யடைந்து தரிசித்தார்; அருளுருக்கொண்டு ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜப் பெருமானைத் தரிசிக்கத் தில்லைக்குப் போக வேண்டுமென எண்ணங் கொண்டார்; பெண்ணை நதியைக் கடந்து திருவதிகையை வந்தடுத்தார். அப்பொழுது செங்கதிர்ச்செல்வனும், மேற்றிசை சென்றடைந்தான். அத்திருவதிகை திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டு புரிந்த இடமானதால், அவர் கைபட்ட இடத்தில் தம் கால்படுதல் முறையன்று என்று எண்ணி, அத்தலத்தைத் தாம் மிதிக்க அஞ்சி, ஊருக்குப் புறத்தேயிருந்த சித்தவடமடத்தில் தங்கி யிருந்தார். இரவில் திருவதிகை வீரட்டானேசுவரரின் உபய சரணாவிந்தங்களைத் தியானித்துக்கொண்டு, அன்றிரவு அம்மடத்திலேயே கண் வளர்ந்தார்.

2

சுந்தர மூர்த்தி நாயனார் நித்திரை செய்து கொண்டிருந்த பொழுது, வீரட்டானத்து விமலர் வயது முதிர்ந்த ஒரு மறையவர் வேடங் கொண்டு, அம்மடத்தினுட் புகுந்து, சுந்தரருடைய முடிமீது தம்மிரு திருவடிகளையும் நீட்டிக்கொண்டு, நித்திரை செய்வார்போல இருந்தார். சுந்தரர் விழித்து, “எனது முடிமீது பாதம் பட மிதிப்பவர் யாவர்?” என்றார். மறையவர், “யான் என்னுடைய மூப்பின் காரணத்தால் நும் தலை இருக்குமிடம் தெரியாது, காலை வைத்து விட்டேன்,” என்றார். சுந்தரர் உடனே எழுந்து, பிறிதோரிடத்திற் போய்ப் படுத்தார். ஆங்கும் அவ் வேதியர் அவ்வாறே செய்ய, வன்றொண்டர் கோபங் கொண்டு, “யாவர் நீர்?” என்றார். சிவபெருமான், “என்னை நீ அறியாயோ?” என்று கூறி, மறைந்தருளினார். இறைவரே அவ்வாறு செய்தார் எனச் சுந்தரர் உணர்ந்து வருந்தி, வீரட்டானேசுவரரைப் பாடினார்.

5. திருவாரூர் அடைதல்.

அந்தத் திருவதிகை வீரட்டானத்துக்குத் தென் புறத்திலிருக்கும் கெடில நதியில் ஸ்நானம் செய்து, அதன் தென்கரை வழியாகத் திருமாணிகுழி, திருத்தினை நகர் முதலான க்ஷேத்திரங்களுக்குச் சென்று, ஸ்வாமி தர்சனம் செய்துகொண்டு, சிதம்பரத்தின் எல்லையை வந்தடைந்தார். அவ்வெல்லையை வணங்கி, வீதிகளைக் கடந்து, நகரினுள்ளே சென்று, ஸ்தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கிக்கொண்டு, கூப்பிய கை

யுடன் ஆலயத்துட் சென்று, கனகசபையில் ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜப் பெருமானைக் கண்டு,

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள,
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாக, குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக,
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

"'தெண்ணிலா மலர்ந்த வேணியாய்! உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதாம்; இன்பமாம்,' என்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்."

பின்பு சபா நாயகருடைய திருவருளால், ஆகாயத்தில், "நீ ஆரூரில் நம்பால் வருக," என ஒரு திருவாக்கு எழுந்தது. அக்கட்டளையைச் சுந்தரர் சிரமேற்கொண்டு, நடராஜரை வணங்கி, விடை பெற்றுத் தில்லையை விட்டுப் புறப்பட்டார்.

வழியில் கொள்ளிடம் ஆற்றைக் கடந்து, திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்த க்ஷேத்திரமாகிய சீர்காழிக்குச் சமீபமாக வந்தார். அத்திருப்பதியை மிதிக்க

அஞ்சி நகர்ப்புறத்தே யிருக்க, சிவபெருமான் காட்சி கொடுத்தருளினார். அது கண்டு வணங்கித் தேவாரம் பாடித் திருக்கோலக்கா, திருப்புன்கூர் முதலிய விடங்களுக்குச் சென்று திருப்பதிகம் பாடிக் காவேரிக் கரையை யடைந்து, மாயூரம், அம்பர் மாகாளம், திருப்புகலூர் முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று, சிவபெருமானை வணங்கித் தேவாரம் பாடித் திருவாரூரைச் சமீபித்தார்.

அதற்கு முன் வன்மீக நாதர் திருவாரூரிலுள்ளவர்களுக்கு, "நம்முடைய அடியவனாகிய நம்பியாரூரன் நம் ஆணைப்படி நம்மை நோக்கி வருகிறான். நீங்கள் அவனை யெதிர்கொண்டு வரவேற்பீர்களாக." எனக் கட்டளையிட்டிருந்தார். அதன்படி அவர்கள் வீதிகளை அலங்கரித்துப் பூரண கும்பங்களுடனும், பல வகை வாத்தியங்களுடனும், நகர்ப்புறத்தே வந்திருந்து கொண்டு, சுந்தர மூர்த்தி நாயனாரை வரவேற்று வணங்கினார்கள். சுந்தர மூர்த்தி நாயனார், கூப்பிய கரத்தராய், அடியார்களும் அவ்வூராரும் பின் பற்றி வர,

"கரையுங் கடலு மலையுங்
காலையு மாலையு மெல்லாம்
உரையில் விரவி வருவா
னொருவ னுருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன் வானவர்
தானவர்க் கெல்லாம்
அரைய னிருப்பது மாரூ
ரவரெம்மையு மாள்வரோ கேளீர்."

என்னும் தேவாரத்தைப் பாடிக்கொண்டு, வீதிகளைக் கடந்து, கோயின்முன் வந்தடைந்தார்? அங்கு வணங்கி எழுந்து, தேவாசிரிய மண்டபத்தை வணங்கி, மூலஸ்தானத்தை வணங்கும்பொருட்டு உள்ளே சென்றார்.

நம்பியாரூரர் வன்மீக நாதரைக் கண்டு வணங்கிப் பதிகம்பாடிக்கொண்டு இருக்கும்பொழுது யாவருக்கும் கேட்கும்படி, "நம்பியாரூர, நாம் உனக்குத் தோழரானோம். அன்று நாம் உன்னை யாட்கொண்ட காலத்தில் நீ அங்கிருந்த மணக்கோலத்துடனே எற்றைக்குமிருந்து பாரில் விளையாடுவாயாக," என்றோர் அசரீரி வாக்கெழுந்தது. அது கேட்ட நம்பியாரூரர், திருவருளை வியந்து வன்மீக நாதரை வணங்கித் துதித்தார்; பின்பு தியாகராஜப் பெருமானைக் கண்டு வணங்கித் திருக்கோயிலை விட்டரிதினீங்கினார். சிவபெருமான் ஆணைப்படி திருநாவலூரரும் திவ்வியாலங்காரத்துடன் தினந்தோறும் வன்மீக நாதரை வணங்கி வருவாராயினர். அன்று தொட்டு அவரை யாவரும் 'தம்பிரான் தோழர்' என அழைக்கலுற்றார்.

6. பரவையார் திருமணம்.

இஃது இங்ஙனமாக, இதற்கு முன்னே திருக்கைலாசகிரியில் நந்தனவனத்தில் இவரை இச்சித்த பார்வதிதேவியாரின் சேடியர்களிருவரில் ஒருவரான கமலினியார் என்பவர், அத்திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் அவதரித்துப் பரவையார் என்னும் பெயருடன் வளர்ந்து வருவாராயினர். அவர் மங்கைப் பருவ மடைந்து, நாடோறும் தம் சகிமார்களுடனே

கோயிலுக்குச் சென்று, ஸ்வாமி தரிசனம் செய்து வருவா ராயினர்.

ஒருநாள் சுந்தரமூர்த்தி நாயனர் அடியார்களுடன் ஸ்வாமி தரிசனத்துக்குக் கோயிலுக்குச் சென்றிருந்த போது, திருவருள் கூட்ட, அங்குக் கடவுளை வணங்கப் போந்திருந்த பரவையாரைக் கண்டு,

"கற்பகத்தின் பூங்கொம்போ!
காமன்றன் பெருவாழ்வோ!
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ! புயல்சுமந்து
விற்குவளை பவளமலர்
மதிபூத்த விரைக்கொடியோ!
அற்புதமோ! சிவனருளோ!
அறியேனென் றதிசயித்தார்."

அவர்மீதாசை கொண்டார். பரவையாரும் சுந்தரரைக் கண்டு அதே நிலை யடைந்தாராயினும், அவ்வாசையை விலக்கிக் கோயிலுள் ஸ்வாமி தரிசனத்துக்குப் போய் விட்டார். சுந்தரமூர்த்தி நாயனர், "ஈசனிடத்தன்றி மற்றெவர்பாலும் செல்லாத என் மனத்தைக் கொள்ளை கொண்ட இந்நங்கை யாரோ?" என ஆங்கு உள்ளாரை வினவ, அவர்கள், "ஸ்வாமி, அவர் இவ்வூர் உருத்திர கணிகையருள் ஒருவர். அவர் பெயர் பரவையார்," என்ருர்கள். உடனே சுந்தரரும் கோயிலுக்குள் சென்ருர். அதற்குள் பரவையார் ஸ்வாமி தரிசனம்செய்துகொண்டு வெளியே புறப்பட்டார். நம்பியாரூரர் அவரைத் தமக்கு விவாஹம் செய்துவைக்கும்படி வன்மீக நாதரை வேண்டி

ஞர். பரவையார் கோயிலை விட்டு நீங்கித் தமது மாளிகைவந்தடைந்து, தாம் கோயிலிற் கண்ட சுந்தரமூர்த்தி நாயனாரை நினைந்து, அவர்மீது ஆசை கொண்டு,

முன்னேவந் தெதிர்தோன்று
முருகனோ ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ?
தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடையண்ணல்
மெய்யருள்பெற் றுடையவனோ?
என்னேயென் மனந்திரித்த
விவன்யாரோ வெனநினைந்தார்."

பாங்கிலுள்ள தோழியை நோக்கி, "நாம் ஸ்வாமி தரிசனத்துக்குக் கோயிலுக்குச் சென்றிருந்தபொழுது வழியில் நம்மெதிரே காணப்பட்ட அவ்வழகர் யாவர்?" என்று வினவ, அவள், "அவர் கடவுளால்ஆட்கொள்ளப் பட்ட அடியார்; அவர் பெயர் சுந்தரர்," என்றாள். பரவையார் அது கேட்டு, "அவர் நம் ஆண்டவருக்கு உரியாரா ? அப்படியா!" என்றிருந்தார்.

கடவுள், சுந்தரமூர்த்தி நாயனாருடைய எண்ணத்தை முற்றுவிக்கக்கருதி, அன்றிரவே அவ்வூரார்கள் கனவில் தோன்றி, "சுந்தரனுக்குப் பரவையை நாளையே விவாகம் செய்து வையுங்கள்," என்று கூறிவிட்டுச் சுந்தரர்பாற் சென்று, "நிற்குப் பரவையை மணம் புரிவித்து வைக்கும்படி அடியார்களுக்கு ஆணை யிட்டிருக்கின்றோம்," என மொழிந்து, பரவையாரிடத்திலும் போய், "உனக்கும் சுந்தரனுக்கும் விவாகம்நடக்கும்," என்றியம்பினார். மறுநாட்காலை பொழுது புலரவும், அடியார்கள் கடவுள்

ஆகிளைப்படி அவ்விருவருக்கும் விவாகத்தை விதிப் படி செய்து வைத்தார்கள்.

7. நெற்குவை யெடுக்க ஆள் வேண்டிப் பெறுதல்.

சுந்தரமூர்த்தி நாயனர் பரவையாரை மணந்து மகிழ்ந்து திருவாரூரில் வாழ்ந்து வரும் நாளில் ஒரு நாள் ஆலயத்துக்குச் சென்றிருந்தபோது, தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார்கள் கூடியிருந்ததைக்கண்டு, "இவர்களுக்கு நான் அடியவன் ஆகும்நாள் எந்நாளோ?" என்று எண்ணி மூலஸ்தானத்தை யடைந்து, வன்மீக நாதரை வணங்க, அவர் காட்சி கொடுத்தருளி, "நீ நம்மடியார்களை வணங்கிப் பதிகம்பாடு," என்று கட்டளையிட்டருளினர். சுந்தரர், "என்னை யாட்கொண்ட எந்தையீர், அடியார்களுடைய வரலாறு இன்னதென்றும், அவர்கள் தன்மை இத்தன்மைத்து என்றும் ஒரு சிறிதும் அறியாத அடியேன் எவ்வாறு அவற்றை இயம்புதல் கூடும்? முற்றுமுணர்ந்த முழுமுதற் கடவுளாகிய நீரே அடியேனுக்கு உணர்வித்தருளல் வேண்டும்," எனப் பிரார்த்திக்க, இறைவர், "தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்," என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினர். உடனே சுந்தரர் தேவாசிரிய மண்டபத்தை யடைந்து, ஒவ்வோர் அடியார்க்கும், 'அடியேன் ; அடியேன்,' எனக் கூறித் திருத்தொண்டத் தொகையென்னும் பதிகத்தைப் பாடி வணங்கினர்.

திருவாரூரில் சுந்தரர் பரவையாரோடு வாழ்ந்து வரும் நாளில், அவருடைய பெருமைகளைக் கேள்வி

யுற்ற கங்காகுல திலகராகிய குண்டையூர்க் கிழவர் அவரிடத்து அளவு கடந்த அன்புடையாராயினர்; அவர் பொருட்டுப் பரவையார் வீட்டுக்கு வேண்டிய நெல்லும், பருப்பும், ஏனைய உணவுப்பொருள்களும் அனுப்பி வந்தார். அவர் இங்ஙனம் நெடுநாளாகச் செய்து வந்தும், ஒரு நாள் வருந்தும்படி நேர்ந்தது. ஏனெனில், மழை யின்மையால் நாடெங்கும் வளங் குன்றத் தலைப்பட்டது. விளைச்சல் இல்லாது போனதால், வழக்கம் போல அனுப்புவதற்கு நெல் போதாது போயிற்று. குண்டையூர்க் கிழவர் மிகவும் மனவருத்த முற்றுக் கடவுளை வேண்டக் கடவுள் அவர் கனவில் தோன்றி, "சுந்தரனுக்கு அனுப்ப யாம் நெல் கொடுத்திருக்கிறோம்," என்று சொல்லிவிட்டுக் குபேரனுக்கு ஆணையிட்டார். உடனே குண்டையூரெங்கும் வானத்தை யளாவும்படி நெற்குவைகள் ஓங்கின.

மறுநாட் காலை, குண்டையூர்க் கிழவர் அவற்றைக் கண்டு அதிசயித்து, "இவை யாரால் திருவாரூருக்குக் கொண்டு போய்ச் சேர்க்கலாகும்? இது நம்மால் சாத்தியம் அன்று. சுந்தரரிடத்துச் சென்று அறிவிப்போம். அவர் கூறியவாறு செய்வோம்," என வெண்ணித் திருவாரூரை நோக்கிச் சென்றார். கடவுள் திருவருளால் சுந்தரர் இவ்விவரத்தை யறிந்து, எதிரே வந்தார். குண்டையூர்க் கிழவர் சுந்தர மூர்த்தி நாயனாரைக் கண்டு, வணங்கி எழுந்து நின்று, நிகழ்ந்தவற்றைக் கூறி, அவரையும் உடன் அழைத்துக்கொண்டு, குண்டையூர் வந்து சேர்ந்தார். சுந்தரர் நெற்குவையைக் கண்டு அதிசயித்து, "சிவபெருமானே இதற்கு ஆள் தந்தாலன்றி,

மானிடரால் இவை எடுத்து ஆகக்கூடியவையல்ல,''என வுணர்ந்து, அருகிலுள்ள திருக்கோளிலி யென்னும் தலத்தை யடைந்து,

"நீளநி னைந்தடியே
 னுமைநித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா
 ளவள்வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான்!
 குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான்!
 அவையட்டித்த ரப்பணியே."

என்னும் திருப்பதிகம் பாடினார்.

உடனே, "ஆரூர, நீ கவலைப்படவேண்டா. நாளைக் காலை நம்முடைய பூதங்கள் நெற்குவையைத் திருவாரூரில் பரவை மனையில் மாத்திரமன்றி, ஊரெங்கும் நெற்குவை யாகும்படி கொண்டு போய்ச் சேர்த்துவிடும்,'' என்றோர் அசரீரி உண்டாயிற்று.

சுந்தரர் அது கேட்டு மகிழ்ந்து, திருவாரூர் சென்றடைந்தனர்; பரவையாரிடம் உற்றவை யனைத்தையும் ஓதினர். மறுநாட் காலை, பொழுது புலருமுன் பூதங்கள் நெற்குவையைக் கொண்டு போய்ப் பரவையார் மாளிகையை நிறைவித்து, ஊர் முழுவதும் நெற்குவையாக்கின. பொழுது விடியவும், சுந்தரரும் பரவையாரும் அவற்றைக் கண்டு மகிழ்ந்தனர். பரவையார் அவரவர் எல்லையிலுள்ள நெல்லை அவரவரே எடுத்துக் கொள்ளுமாறு பறை சாற்றுவித்தார்.

8. செங்கல்பொற்கல் ஆதல்.

சில நாட்கள் சென்றபின் திருநாட்டியத்தான்குடியிலுள்ள கோட்புலி நாயனார், சுந்தர மூர்த்தி நாயனாரைக் கண்டு தரிசிக்க விரும்பித் திருவாரூருக்கு வந்து, அவரைக் கண்டு வணங்கித் தம் ஊருக்கு எழுந்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தார். சுந்தரர் அதற்கு மனம் இசைதலும், கோட்புலியார் முன்னே தம் ஊருக்குச் சென்று, தம்மாளிகையையும், ஊரையும் அலங்கரிக்கச் செய்து, குரு மணியின் வருகையை எதிர் பார்த்திருந்தார்.

சுந்தர மூர்த்தி நாயனார் வன்மீக நாதரை வணங்கி விடைபெற்றுத் திருநாட்டியத்தான் குடியைக் குறுகுதலும், கோட்புலியார் எதிர் கொண்டு, தமது மாளிகைக்கு அழைத்துச் சென்றார். அவரை ஆசனத்தில் அமர்ந்தருளச்செய்து, விதிப்படி அருச்சனை, திருவமுது செய்வித்து, வணங்கி வழிபட்டுத் தம் புத்திரிகளாகிய சிங்கடியார், வனப்பகையார் இருவரையும் காண்பித்து, "தேவரீர் இவர்களை அடிமையாகக் கொள்ள வேண்டும்," எனப் பிரார்த்தித்தார். சுந்தரர் அவர்களிருவரையும் தம் குழந்தைகளாகப் பாவித்துத் தொடையின்மீ திருத்தி உச்சி மோந்து, அவர்களுக்கு வேண்டுவனவற்றைக் கொடுத்து மகிழ்வித்து, ஆலயத்தையடைந்து, பரமசிவனாரை வணங்கித் தேவாரம் பாடினார்; பின்பு, அங்கிருந்து வலிவலம் சென்று, இறைவரை வணங்கி, மீண்டும் திருவாரூர் வந்தடைந்தார்.

ஆங்கிருக்கும் நாளில் பங்குனி உத்திரத் திருநாள் சமீபித்ததால், பரவையாருக்குக் கொடுக்கப் பொன் கொண்டு வரும்பொருட்டுத் திருப்புகலூரை அடைந்தார். ஆங்கு, கடவுளை வணங்கிப் பதிகம் பாடி, அருகிலுள்ள மடத்தில் போயிருக்க வெண்ணி, வெளியே வந்து, கோயிலின் முன்றிலில் ஒரு பக்கத்தி லிருக்க, அவரை யறியாது கடவுள் திருவருளால் நித்திரை வந்தது. உடனே சுந்தரர் உத்தரீயத்தைக் கீழே விரித்துத் திருப்பணிக்கு வந்து கிடக்கும் செங்கற்களை அடுக்கித் தலைக்கு உயரம் வைத்து நித்திரை செய்தார். தூங்கி விழித்தெழுந்து பார்த்தபோது அந்தச் செங்கற்கள் யாவும் பொற்கல்லா யிருக்கக் கண்டு, சிவபெருமானுடைய திருவருளை வியந்து,

"தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மை யேதருஞ் சோறுங் கூறையு
மேத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற்
கியாது மையுற வில்லையே."

என்னும் திருப்பதிகம் பாடிப் பொற்குவியலையெடுத்துக் கொண்டு, பனையூர்ப் புறத்தே சென்றார். ஆங்குச் சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளும் திருக்கோலத்தைக் காட்டக் கண்டு தரிசித்துத் திருவாரூர் வந்தடைந்தார்.

9. ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தல்.

சில நாட்களுக்குப் பிறகு, சுந்தர மூர்த்தி நாயனார் மற்றச் சிவஸ்தலங்களுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து வரவேண்டுமென நினைத்து, வன்மீக நாதரை வணங்கி விடைபெற்றுத் திருவாரூரினின்றும் புறப்பட்டார். நன்னிலம், திருவீழிமிழலை முதலாயுள்ள திருப்பதிகளுக்குச் சென்று, கடவுளை பழிபட்டுத் திருவாலம் பொழிலை யடுத்து ஸ்வாமியை வணங்கி, அன்றிரவு அங்குத் தங்கினார். கண்டுயிலுங்கால் கண்ணுதற் பெருங் கடவுள் அவர் கனவிற்றோன்றி, "மழபாடிக்குவர மறந்தனையோ?" என்றுசொல்லி யருளினார். சுந்தரர் விழித்தெழுந்து, சிவபிரானைத் தியானித்துக்கொண்டு, பொழுது புலராலும் காவேரி யாற்றைக் கடந்து, மழபாடிக்குச் சென்று கடவுளை வணங்கி,

" பொன்னார் மேனியனே!
புலித்தோலைய ரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கோன்றை யணிந்தவனே!
மின்னே! மாமணியே!
மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! உன்னையல்லா
லினியாரை நினைக்கேனே?"

என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

அங்கிருந்து புறப்பட்டுக் காவேரியின் இரு கரையிலுமுள்ள தலங்களை வணங்கிக்கொண்டு, திருவானைக்-

காவுக்கு வந்தடைந்தார். அங்குப் பரமேசுவரரை வணங்கித் தேவாரம் பாடி, அத்திருப்பதிகத்தில் உறையூரிலிருந்த சோழ ராஜன் கழுத்தில் அணிந்திருந்த பதக்கத்துடன் கவேரியில் நீர் படிய அது வழுவிப் போனமையைக் கண்டு, அவன், "சிவபெருமானே, கொண்டருளும்," என்று வேண்ட, அது திருமஞ்சனக் குடத்தில் ஜலத்துடன் புகுந்து, அபிஷேகத்தின்போது அதனைச் சிவபெருமான் அணிந்து காட்சி கொடுத்த பெருமையை,

"தார மாகிய பொன்னித்
தண்டுறை யாடி விழுத்தும்
நீரி னின்றடி போற்றி
'நின்மலா கோள்,' என வாங்கே
ஆரங் கொண்டவெம் மானைக்
காவுடை யாதியை யாளும்
ஈர முள்ளவர் யாளும்
எம்மையும் ஆளுடை யாரே"

என்னும் திருப்பாசுரத்தாற் சிறப்பித்துப் பாடினார்.

பிறகு அங்கிருந்து திருப்பாச்சிலாச்சிராமத்தையடைந்து, சிவபெருமானைப் பாடிப் பொன் பெற்றுக்கொண்டு, திருப்பைஞ்ஞீலி, திருவீங்கோய் மலை முதலிய பதிகளுக்குச் சென்று கடவுளை வழிபட்டுக் கொங்க தேசத்தை யடைந்து, ஆங்குள்ள தலங்களுக்குச் சென்று, மீண்டும் சிதம்பரத்துக்குப் போதர வேண்டும் என்னும் அவாவினால் சோழ நாட்டுக்கு வந்து, இடையிலுள்ள தலங்களை வணங்கிக்கொண்டு, கூடலையாற்றூ

ரைக் குறுகியும் அங்கேகாது, விருத்தாசலத்தை நோக்கிச் சென்றார். செல்லும் நெறியில் சிவபெருமான் ஒரு வேதியர் வடிவு கொண்டு அவர் முன் நிற்கச் சுந்தரர், "ஐயரே, திருமுதுகுன்றுக்கு வழி யாது?" எனக் கேட்டார். அவர், "இது கூடலையாற்றூருக்குப் போகும் வழி," எனக் கூறி, வழி காட்டிக்கொண்டு முன்னே சென்றார். சுந்தரர் அவரைப் பின்பற்றிச் சென்று மத்தியில் அவரைக் காணாது மயங்கி,

"வடிவுடை மழுவேந்தி மதகரி யுரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடுங்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த வதிசய மறியேனே!"

என்னும் திருப்பதிகத்தைப் பாடிக் கூடலையாற்றூரை யடைந்து, ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு, விருத்தாசலம் சென்றடைந்தார்.

அத்தலத்தில் சுந்தரர் பழமலை நாதரை வணங்கி, வண்டமிழ்ப் பதிகம்பாட, ஸ்வாமி பன்னீராயிரம்பொன் அளித்தார். அவர் கண்டு, "இறைவீர், இப்பொன்னை யென்னால் கொண்டு போதல் இயலாது. ஆகையால், இதனை அத்திருவாரூரார் அதிசயிக்கும்படி ஆங்கு வரச் செய்தருளும்," என வேண்டினார். "சுந்தரா, இதனை இம்மணிமுத்த நதியில் இட்டுவிட்டுத் திருவாரூர்க் குளத்தில் போய் எடுத்துக்கொள்," என ஸ்வாமி கட்டளையிட்டருள், அவரும் அவ்வாறே அப்பொன் முழுவதையும் அவ்வாற்றில் இட்டுவிட்டு, "என்னை ஈசர் ஆண்ட திறத்தை இதில் அறிவேன்," எனச் சொல்லிப்

புறப்பட்டுச் சிதம்பரம் சென்றடைந்து, நடராஜப்பெருமானை வணங்கிக்கொண்டு, அதினின்று நீங்கி, இடையிலுள்ள பிற பதிகளையும் வணங்கிக்கொண்டு, திருவாரூர் வந்தடைந்தார்.

சுந்தரர் திருவாரூரை யடைந்து, வன்மீக நாதரை வணங்கிப் பரவையாரோடு மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர். ஒருநாள் அவர் பரவையாரிடத்தில் பழமலை நாதர் தமக்குப் பன்னீராயிரம் பொன் அளித்ததைப் பகர்ந்தார். பரவையார் சுந்தரரை நோக்கி, "அப்பொன் எங்கே?" என்று கேட்க, அவர், "ஆங்கு ஆற்றில் இட்டுள்ளேன்; ஈங்குக் குளத்தில் எடுத்து உனக்குத் தருகிறேன்; வா," என்றுரைக்கப் பரவையார் கேட்டு, முறுவலித்து, 'இஃது என்ன அதிசயம்!' என்று சொல்லி நகைத்தார். சுந்தரர், "வாணுதல் மயிலே, இது பொய்யன்று, சத்தியம். கடவுள் அருளால் எடுத்துக் கொடுக்கிறேன்; வா," எனக் கூறிப் பரவையாரை அழைத்துக்கொண்டு கோயிலுக்குவந்து, வன்மீக நாதரை வணங்கிக்கொண்டு, மேற்றிசையி லிருக்கின்ற குளத்தின் வட கீழ்க்கரையை யடைந்து, பரவையாரை ஆங்குக் கரையில் நிறுத்திவிட்டுத் தாம் குளத்தினுள் இறங்கித் தடவினர்.

வன்றொண்டர் பொற்குவியலை யெடுக்கும்பொருட்டுக் குளத்தில் தடவித் தடவிப் பார்த்தார். சிவபெருமான் சுந்தரரின் தேவாரவமுதை இன்னும் பருகுவான் வேண்டியும், ஒரு திருவிளையாடல் நடிப்பான் வேண்டியும், பொன்னைக் குளத்தில் வருவியாதிருந்தார். பரவையார், சுந்தரர் குளத்தில் பொன்னைத் தேடிக்கொண்டிருப்பதைப் பார்த்து, "ஆறிலிட்டுக் குளத்தில் தேடு

வாருண்டோ?'' எனப் பரிகசிக்கச் சுந்தரர் வெட்கி, "இறைவரே, நீர் எனக்கு வாக்களித்தபடி பொன்னைத் தந்தருளும். பரவை என்னைக் கண்டு பரிகசிக்கின்றாள்,'' எனப் பழமலை நாதர் மேல்,

" பொன்செய்த மேனியினீர்!
புலித்தோலை யரைக்கசைத்தீர்!
முன்செய்த மூவெயிலு
மெரித்தீர்! முது குன்றமர்ந்தீர்!
மின்செய்த நுண்ணிடையாள்
பரவையிவள் தன்முகப்பே
யென்செய்த வாறடிகே
ளடியேனிட் டளங்கெடவே."

என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே சிவபெருமான் திருவருளினால் பொற்குவியல் அகப்பட்டது. அதனை யெடுத்துக் கரையில் கொணர்ந்து அப் பொன்னையும், முன் தாம் கொண்டு வந்து வைத்திருந்த மசசத்தையும் உரையிட்டு ஒத்துப் பார்க்கக் குளத்தில் எடுத்த பொன் மாற்றுக் குறைவாயிருந்தது. உடனே சுந்தரர் இறைவரை உள்ளபடி கொடுத்தருளும்படி வேண்ட, ஈசுவரரும் அவ்வாறே செய்தருளினார். நம்பியாரூரர் மனமகிழ்ந்து, பொன்னை யாட்களின் தலையிலேற்றி வைத்துப் பரவையாரோடு மாளிகைக்கு அனுப்பித் தாம் கோயிலுக்குச் சென்று, கடவுளை வணங்கி, மாளிகைக்கு வந்து,பரவையாரோடு இன்புற்று வாழ்ந்து வந்தார்.

10. இறைவர் பொதி சோறு கொடுத்தல்.

சில நாட்கள் சென்ற பிறகு, திருநாவலூரார் சிவஸ்தலங்களுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து வர வேண்டுமென நினைத்து, திருவாரூரினின்றுபுறப்பட்டுத் திருநள்ளாறு முதலாயுள்ள திருப்பதிகளுக்குச் சென்று, சிவபெருமானை வணங்கி வழிபட்டுச் சீர்காழியை வலங் கொண்டு, பாலறுவாயரைப்பாவித் திருக்குருகாவூருக்குச் சென்றார். வழியில் நம்பியாரூரார் தாகத்தாலும், பசியாலும் நனி வருந்தினார்.

இதனை யுணர்ந்த சிவபெருமான், நம்பியாரூரார் களைப்பைக் களைவான், பக்கத்திலொரு பந்தலை யுண்டாக்கி, அங்கே ஒரு வேதியர் வடிவத்தோடும் தண்ணீரும்பொதி சோறும் வைத்துக்கொண்டு, சுந்தரர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். சுந்தரர் ஆங்கு வந்தடைந்து, குளிர் நிழலைத் தரும் பந்தரைக் கண்டு,அடியார்களுடன் அப்பந்தருட் சென்று, பிராமண வடிவத்துடனிருக்கும் சிவபெருமானுக்குப் பக்கத்தில் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக்கொண்டிருந்தார். பிராமணராகிய சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரைப்பார்த்து, 'ஐயரே, நீர் பசியால் இளைத்தவர்போலக் காண்கின்றீர். என்னிடம் கொஞ்சம் பொதி சோறுளது. அதனை யருந்திக் களையாறும்,'' என்று கூறிப் பொதி சோற்றைக் கொடுத்தார்.

சுந்தரர் அதற்கிணங்கி, அப்பொதிசோற்றைவாங்கி அடியார்களுடன் அருந்தினார். எத்தனை அடியார் இருந்து உண்டும், அவ்வண்ணம் குறையாது அக்ஷயமாகவே இருந்தது. அவர்கள் திருப்தியாக உண்டு, தாக சாந்தி

பண்ணிக்கொண்டு, உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு ஆதலால், அவ்வையரைப் புகழ்ந்து, முகமன் கூறி, நித்திரைபோயினர். சுந்தரர் தூங்கிவிழித்துப் பந்தரும் ஐயரும் காணாமையைக்கண்டு, அதிசயித்து, அரனாரைப் புகழ்ந்து திருக்குருகாவூர் சென்று, ஸ்வாமிதரிசனம் செய்துகொண்டு, அங்கே இருந்தார்.

11. தொண்டை நாட்டுத் தலங்களுக்குப் போய்த் திருவொற்றியூர் அடைதல்.

சுந்தர மூர்த்தி நாயனார் திருக்குருகாவூரினின்றும் புறப்பட்டுத் திருக்கழுக்குன்றம் முதலான க்ஷேத்திரங்களுக்குப்போய், ஸ்வாமி தரிசனம்செய்துகொண்டு திருக்கச்சூரை யடைந்து, ஆலக்கோயினுள்ளேசென்று, ஸ்வாமியை வணங்கி வெளியே வந்தார். திருவமுது செய்யும் நேரம் வந்தடுத்தது. அமுதிடுவோர் வந்தெய்தினரில்லை. சுந்தரரோ, பசியின் மிகுதியால் களைப்புற்றுத் திருமதிலின் பக்கத்தில் அயர்ந்து உட்கார்ந்திருந்தார். அப்பொழுது பரம கருணாநிதியாகிய பரமசிவனார், ஓர் அந்தணர் வடிவத்துடன், திருவோடொன்றைக் கையிலேந்திக் கொண்டு, ஆரூரர் முன் வந்தடைந்து, "ஐயரே, அருந்த அன்னமின்றி அயர்ந்துள்ளீர் போலும்! சற்று நேரம் ஈண்டேயிரும். யான் 'இன்னே இவ்வகரத்துச் சென்று, சோறும் கறியும் ஏற்று வருவல்," என்றியம்பிப் பக்கத்திலுள்ள வேதியர் வீடுகளில் அன்னமும் கறியும் யாசித்து வந்து, "பசி தீர இதனை யுண்டு களைப்பாறும்" எனக் கொடுத்தார். சுந்தரர் அவ்வேதியரின் அன்பைக் கண்டு புகழ்ந்து வணங்கி வாங்கித் தொண்டர்களுடன்

உண்டு மகிழ்ந்தார். உடனே வந்த வேதியர் மறைந்தார். கடவுளே தம்பொருட்டு இவ்வாறு செய்தருளினர் என நம்பியாரூரர் உணர்ந்து திருவருளை வாழ்த்தி அவ்வூரை விட்டு நீங்கிக் காஞ்சியை வந்தடுத்தார்.

நம்பியாரூரர் வருகையை அந்நகரத்தார் கேள்வியுற்று, மங்கல வாத்தியங்களுடனும், பூரண கும்பங்களுடனும் எதிர்கொண்டழைக்கச் சென்றார்கள். வந்து வணங்கிய அன்பர்களை இவரும் வணங்கி, அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு நகரினுட் சென்று, ஆலயத்தை யடைந்து, மாவடி நீழல் வைகும் ஏகாம்பரநாதரையும், காமகோட்டத்தில் இருந்தருளும் காமாக்ஷியம்மையையும் வணங்கிக்கொண்டு, அந்நகரில் சிலநாள் வசித்திருந்தார். பின்பு அதனை விட்டுப் பிரயாணமாகி வழியில் பல பதிகளையும் வணங்கிக்கொண்டு, திருக்காளத்தி மலையை யடைந்தார். அம்மலையைச் சுற்றி வலம் வந்து மேலேறிக் காளத்தியப்பரையும், அவர் வலப்பக்கத்தில் அன்பே ஓர் உருக்கொண்டு எழுந்தாற்போலிருக்கும் கண்ணப்பரையும் வணங்கி, கீழே இறங்கி அங்கே சில நாள் வசித்திருந்தார். அங்கிருந்துகொண்டு உத்தர தேசத்தி லுள்ள சீசைலம், திருக்கேதாரம் முதலிய தலங்களை வணங்கிப் பதிகம் பாடி அங்கிருந்து புறப்பட்டுச் சமுத்திரக் கரையிலுள்ள திருவொற்றியூர் வந்து சேர்ந்தார்.

12. சங்கிலியார் வரலாறு.

ஆதியில் திருக்கைலாயத்தில் சுந்தரமூர்த்திநாயனரைக் கண்டு ஆசை கொண்ட சேடியரிருவரில் கமலினியார் திருவாரூரில் பரவையாராக வந்து அவதரித்தது போல அனிந்திதையாரும் ஞாயிறு என்னும் ஊரில்வேளாளர் குலத்தில் ஞாயிறு கிழவர் என்பவருக்குப் புத்திரியாராக வந்து அவதரித்தார். அவருக்குச் சங்கிலியார் என்னும் பெயரிட்டுப் பெற்றோர்கள் அவரை அருமை பெருமையுடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார்கள். அவரும் விவாகத்துக்கு உரியதொரு பருவத்தை யடைதலும், பெற்றோர்கள் அவருடைய எழிலாதி குணங்களுக்கேற்ற ஒரு புருஷனைத்தேடி விவாகம்செய்துவைக்க வேண்டுமெனப் பேசிக்கொண்டார்கள். இவ்வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்த சங்கிலியார், "இவர்கள் கூறும் கூற்று எனக்கு ஒரு சிறிதும் ஒவ்வாததாகும். யான், நம் பரமபதியாகிய சிவபெருமானுடைய திருவருளைப் பெற்ற செல்வர் ஒருவருக்கு உரியவள் ஆக வேண்டுமென எண்ணியிருக்க, இவர்கள் இவ்வாறு இயம்பிக்கொண்டிருக்கிறார்களே! யாது விளையுமோ! அறியேன்!" என எண்ணி, அச்சங் கொண்டு, அறிவு சோர்ந்து, மயங்கிக் கீழே விழுந்தார்.

இது கண்ட பெற்றோர்கள் நடுநடுங்கி, "இஃது என்ன விபரீதம்? யாதோ இவளுக்கு நேர்ந்தது?", எனக் கதறி, அவரைத் தூக்கிப் பனிநீர் தெளித்து, வேண்டிய சைத்தியோபசாரங்கள் செய்தார்கள். அவரும் அவற்றால் கொஞ்சம் மூர்ச்சை தெளிந்து, அறிவு

பெற்றுக் கண் விழித்தார். அவர்கள் அவரை, "அம்மா, உனக்கு நேர்ந்தது யாது? ஏன் இவ்வாறு அறிவு சோர்ந்து விழுந்தனை?" எனக் கேட்டார்கள். அவர், "நீங்கள் பேசிய பேச்சு என் கொள்கைக்குச் சற்றும் ஒவ்வாததாகும். ஈசர் அருள் பெற்ற ஒருவருக்கே யான் உரியவள் ஆக வேண்டுமென எண்ணியிருக்க, நீங்கள் பல வகையாம் மாற்றம் பகர்ந்தீர்கள். யான் அது பொருது, அயர்ந்து வீழ்ந்தேன். இனி, யான் இங்கிருத்தல் தகாது; திருவொற்றியூரை யடைந்து, அருள் வழி நடப்பேன்," என்றார்.

ஈன்று வளர்த்த இருமுது குரவரும் இதனைக் கேட்டு வெளிப்படுத்தவும் மனமில்லாராய், அச்சமும் வியப்பும்கொண்டு, நடந்தவற்றை யொளித்து, ஒழுகி வந்தார்கள். இவர்கள் குலத்துக்கும், குடிப்பிறப்புக்கும் ஏற்ற ஒருவன் சங்கிலியாரின் எழிலாதியவற்றைக் கேள்வியுற்று, அவரை மணம் புரிந்துகொள்ள எண்ணிச் சில முதலியோர்களை ஞாயிறு கிழவர்பாற் சென்று உள்ளக் குறிப்பை யறிந்து வரும்படி உய்த்தனன். அவர்களும் அவ்வாறே வந்தார்கள். ஞாயிறு கிழவர் மணம் பேச வந்தவர்களுக்கு உள்ள விஷயத்தை யோதாது, வேறு சில காரணங்களைக் கூறி, அஃது இசையாதெனச் சொல்லி யனுப்பினர். சில நாளில் சங்கிலியாரை இச்சித்தவனும், அவரை மணம் பேச வந்தவர்களும் மாண்டொழிந்தார்கள். சங்கிலியாருடைய தாய் தந்தையர்கள் இதனைக் கேள்வியுற்று வருத்தமும், அச்சமும் கொண்டு, கடவுளின் திருவருட்பாங்கை அறிந்து, இனி யாரும் அவர்

பால் அபசாரம் செய்யாதபடி உள்ள விஷயத்தை உல கினர்க்கு அறிவித்தார்கள். மேலும், சங்கிலியாரை அவர் இச்சை வழி வைத்தலே உசிதமென எண்ணித் திருவொற்றியூரிற் கொண்டுபோய், ஆங்கொரு கன்னி மாடம் அமைத்து, அதிலிருந்து கொண்டு சிவபெருமானை வழிபட்டு, வேண்டிய பணிவிடைகள் புரிந்து வரும்படி யும் ஏற்பாடு செய்தார்கள்.

சங்கிலியாருமவ்வாறே அக்கன்னி மாடத்திருந்து, சிவபெருமானை முக்காலங்களிலும் வணங்கிக்கொண்டு, பூக்கட்டு மண்டபத்தில் ஒரு திரையிட்டு, அதன் அப் புறத்தி லிருந்து ஸ்வாமிக்குச் சாத்த மாலை தொடுத்துக் கொடுத்தல் முதலிய சிவ கைங்கரியமாகிய பணிவிடை களைச் செய்து கொண்டிருந்தார்.

13. சங்கிலியாரை மணத்தல்.

சுந்தர மூர்த்தி நாயனார் திருவொற்றியூரில் வாழ்ந்து வருங்கால், ஒரு நாள் அவர் கோயிலுக்குச் சென்று, ஸ்வாமி தரிசனம் செய்து முடிந்த பிறகு கோயிலைவலம் வரும்பொழுது, ஆங்காங்கு அடியார்கள் புரிந்து வரும் பணிவிடைகளைப் பார்த்துக்கொண்டு, புஷ்பப் பணி விடை நடக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தார். ஆங்கு அடியார்கள் ஸ்வாமிக்குச் சாத்தப் பூ மாலைகள் கட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டு நின்றார். அவ் வமயம் விதியின் செயலால் திரைக்குள்ளிருக்கும் சங் கிலியார் பூ மாலையைக் கட்டி முடித்துத் திரைக்கு வெளியி லிருப்பவர்களிடம் திரையை நீக்கி அதைக்

கொடுத்துவிட்டு, மின்னற் கொடி போலத் திரைக்குள் மறைய, சுந்தரர் அவரைக் கண்டனர். காண்டலும், அவர் மனம் அவ்வம்மையார்பாற் சென்றது.

சுந்தரர் சங்கிலியார்மீது ஆசை கொண்டாராய், வெளியே வந்து, ஆங்குள்ளாரை, "அத்திரைக்குள்ளிருக்கும் அன்னமென்னடையாள் யார்?" என வினவினர். அவர்கள், "ஸ்வாமி, அவர் பரமசிவனுருக்குப் பத்தியுடன் நாளும் பணிவிடை புரிபவர். அவர் கன்னிகையார். அவர் பெயர் சங்கிலியார்," என்றுரைத்தார்கள். சுந்தரர் உடனே கோயிலுக்குட் சென்று, ஸ்வாமியை வணங்கி, சங்கிலியாரைத் தமக்கு மணம் புரிந்து வைக்கும்படி வேண்டிக் கோயிலில் ஒரு புறத்தில் இருந்தார். அப்பொழுது ஆதித்தனும் அஸ்தமன கிரியையடைந்தான். இருளும் வந்தடர்ந்தது. அப்பொழுது சிவபெருமான் சுந்தரர் முன் தோன்றி, "எவராலும் இயற்றொணாத தவ நெறியில் நின்றொழுகும் மகா உத்தமியாகிய சங்கிலியை யாம் உனக்கு மணம் முடித்து வைக்கின்றோம். நீ அதற்காகக் கவலைப்படவேண்டா," எனக் கூறி, மறைந்தருளினார்.

பின்பு அர்த்த ஜாம வேளையில் சிவபெருமான் கன்னி மாடத்திற் கண்டுயில் புரியும் சங்கிலியார் கனவிற் சென்று, "சங்கிலி, நம்பால் மிகுந்த பக்தியுடையோனும் நம்மால் ஆட்கொள்ளப்பட்டோனும், நம் தோழனுமாகிய சுந்தரன் நின்னை விரும்பித் தனக்கு அளிக்கும்படி நம்மைப் பிரார்த்திக்கின்றான். நீயும் மனமுவந்து அதற்கு இணங்குவாயாக," எனக்கூறினார். சங்கிலியார், "ஸ்வாமி, உமது திருவாக்குக் எதிர்வாக்கில்லை. யானும், அப்

பெருமானுக்கு மனைவியாகச் சித்தமா யிருக்கின்றேன். ஆயினும், ஒரு விண்ணப்பம் உண்டு: அன்னார் திருவா ரூரில் வசிப்பதில் மிகுந்த ஆவலுடையவரல்லரோ?'' என்ளுர். கடவுள், ''நங்காய், அவன் 'நினை விட்டுப் பிரியேன்' எனச் சபதஞ்செய்து தருவான்,'' என்று கூறிச் சுந்தரர் பாற் சென்று, ''நின் எண்ணத்தைச் சங்கிலிக்கு அறி வித்துள்ளோம். நீ அவளைவிட்டுப் பிரிகிறதில்லை எனச் சபதஞ்செய்து தரவேண்டும். இன்றேல், அவள் இணங் காள்,'' எனக் கூறினர். சுந்தரர், ''ஆண்டவரே, யான் அவ்வாறு நும் சந்நிதியில் சபதம் செய்யுங்கால்தேவரீர் அங்கில்லாது மகிழ மரத்தடியிற்போ யெழுந்தருளும்,'' என்று வேண்ட, அவரும், ''அவ்வாறே செய்வோம்,'' எனப் பகர்ந்து, சங்கிலியாரிடம் சார்ந்து, ''நீ சுந்தரனை மகிழ மாத்தின்கீழ்ச் சபதம் செய்யும்படி கேள்.'' என இசைத்து, மறைந்தருளினர்.

சங்கிலியார் விழித்தெழுந்து, தாம் கனவிற் கண்ட அதிசயங்களையும் ஈசர் திருவருள் இருந்த விதத்தையும் எண்ணி யெண்ணி, அச்சமும் ஆச்சரியமும் கொண்டு, நித்திரையும் கொள்ளாது, பக்கத்திற் படுத்துறங்கிய பாங்கிமார்களை யெழுப்பிக் கனவில் நிகழ்ந்தவை யனைத் தையும் ஒன்றொழியாது எடுத்தோதினர். இதற்குள் திருப்பள்ளி யெழுச்சிக்கு மாலை தொடுத்துக் கொடுக் கும் நேரமும் ஆயிற்று. உடனே அவர் சேடியர்களோடு கோயிலுக்குச் சென்றார். சுந்தரரும் சங்கிலியாருக்குச் சபதம் செய்து தரும்பொருட்டு அங்கு முன்னரேபோந் திருந்து, அவர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். சங்கிலியார் வரவும், சுந்தரர் அவர் முன் சென்று, பரம சிவனார் தமக்குக் கட்டளையிட்டருளியதைப் பகர்ந்

தார். அவர் நாணத்தால் எதிருரை ஒன்றும் உரையாது, கோயிலுக்குட்போயினார். நம்பியாரூரர் அவரைப் பின் தொடர்ந்து சென்று, "மாதே, 'நின்னை விட்டுப்பிரியேன்,' எனச் சபதம் செய்யச் சித்தமாயிருக்கின்றேன். ஸ்வாமி சந்நிதிக்குவா," என்றார். சங்கிலியார் கனவைக் கேட்டிருந்த சேடியர்கள், "ஸ்வாமி, இதற்காக நீவிர் சிவ சந்நிதானத்தில் சபதம் செய்வது தகாது," என, அவர், "பின் யாண்டே செய்தல் வேண்டும்?" என, அவர்கள், "மகிழ மரத்தடியிற் செய்தாற் போதும்," என்றார்கள். சுந்தரர் கேட்டு மன மயங்கி, நாம் இதற்கியாது செய்யலாம்? மறுக்கின், மணம் தவறினும் தவறும். இதற்கும் இசையத்தான் வேண்டும்," என வெண்ணி, "ஆண்டே செய்வல்; வாருங்கள்," என்றுசொல்லி, அவர்களை அழைத்துக்கொண்டு மகிழ மரத்தடியில் வந்து, அதனை மும்முறை வலம் செய்து, "நின்னை யான் பிரியேன்,' எனச் சபதம் செய்து கொடுத்தார். சங்கிலியார், "இதை நாம் காண நேர்ந்ததே!" என வருந்தி, ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றார்.

சுந்தரர் உடனே கோயிலுக்குட் சென்று, கடவுளை வணங்கித் திருமாளிகைக்குத் திரும்பினார். சங்கிலியாரும் சேடியர்களுடன் பூத்தொடுக்கும் மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார். அன்றிரவே சிவபெருமான் திருவொற்றியூரி லுள்ள தொண்டர்களுக்கும் சொப்பனம் சாதித்து, "சங்கிலியைச் சுந்தரனுக்கு விவாகம் செய்து கொடுங்கள்," எனக் கூறியருளினார். அவ்வாறே மறுநாளில் அவ்வூரி லுள்ள சகல ஜனங்களும் கூடிச் சங்கிலியாரைச் சுந்தர மூர்த்தி நாயனாருக்கு மிகுந்த சிறப்புடன் விவாகம் செய்து கொடுத்தார்கள். அவர்களும் ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்கள்.

14. கண்ணிழந்து பெறுதல்.

வன்றொண்டப் பெருமான் திருவொற்றியூரிலேசங் கிலியாரோடு வாழ்ந்துவருங் காலத்தில் திருவாரூரில் வீதி விடங்கப் பெருமானுடைய வசந்தோற்சவ காலம் சமீ பித்தது எனக் கேள்வியுற்றுத் திருவாரூரை நினைந்து, வன்மீகநாதரை அத்துணை நாள்வரை பிரிந்திருந்தமைக் காக ஆருக் கவலை உற்று, அவரை நினைந்து,

"பத்திமையும் மடிமையையுங் கைவிடுவான்
பாவியேன்
பொத்தினநோ யதுவிதனைப் பொருளறிந்தேன்
போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை வயிரத்தை
மூர்க்கனேன்
எத்தனைநாட் பிரிந்திருக்கே னென்னாரு
ரிறைவனையே."

எனப் பாடியிருந்தார். மற்றொருநாள் அவரை நினைத்து திருவாரூர் ஏக வேண்டிக் கோயிலுக்குச் சென்று, கட வுளை வணங்கித் திருவொற்றியூரை விட்டுத் திருவாரூர் புறப்பட்டார்.

கடவுள் சந்நிதானத்திற் சபதம் புரிந்து மீறினமை யால் அவ்வூரை விட்டகலவும், இருகண்ணும் தெரியாது போயின. சுந்தரர் ஏங்கினார், வாடினார், வருந்தினார்; "வாக்குத் தவறியதால் வந்தது இத்துன்பம்," எனத் தம்மைத் தாமே நொந்துகொண்டார்; "எய்திய இந்தத் துன்பம் நீங்க இறைவரை வேண்டுவேன்," என,

"அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வ ரடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்
மற்று நானறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க வென்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனு மூருறை வானே!"

என்ற திருப்பதிகத்தைப் பாடி வேண்டினார். வேண்டியும், கண் ஒளி பெற்றாரில்லை. எவ்விதத்திலும் திருவாரூர்க்குப் போக வேண்டுமெனும் அவாத் தூண்ட, அதனால் உந்தப் பெற்றாராய், அடியார்கள் முன் வழி காட்டிச் செல்ல நடந்து, திருமுல்லைவாயில் வந்து சேர்ந்தார். ஆங்குச் சிவபெருமானை வேண்டிப் பதிகம் பாடித் திருவெண்பாக்கத்தை யடைந்து, கடவுளை வணங்கி, "திருக்கோயில் உள்ளீரே?" என்று வேண்ட, அவர் ஊன்று கோல் ஒன்று அளித்து, "உள்ளோம்; போகீர்," எனக் கூறியருளினார். வன்றொண்டர்,

" 'பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன்
பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண்
மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா! கோயிலுளா
யே?'என்ன,
உழையுடையா னுள்ளிருந்து, 'உளோம்போகீர்,'
என்றானே."

என்று வேண்டி, இடையிலுள்ள திருப்பதிகளுக்கும் சென்று, காஞ்சீபுரம் வந்து சேர்ந்தார்.

ஆங்கு லோக மாதாவாகிய காமாக்ஷி யம்மையை வணங்கி, ஏகாம்பர நாதர் சந்நிதிக்கு வந்து வணங்கி, "தேவர் துயரம் தீர்த்த தேவ தேவரே, அடியேன் பிழையைப் பொறுத்துத் தேவரீர் உபய சரணாரவிந்தங் களைக் கண்டு தரிசிக்கும்படி எனக்குக் கண் கொடுத்தரு ளும்," என வேண்டச் சர்வாபீஷ்ட வரதராகிய சிவ பெருமான் இடக்கண்ணைத் தந்தருளினர். உடனே சுந் தரர் சுவாமியின் திருக்கோலத்தைக் கண்டு தரிசித்து, அடியற்ற மரம்போற் படிமிசை விழுந்து வேண்டிச் சில நாள் அங்குறைந்தார்; பின்பு திருவாரூர் சென்று தியா காராஜப் பெருமானைக் கண்டு தரிசிக்கவேண்டும் என்னும் அவாத் தூண்ட, அங்கிருந்து புறப்பட்டு, வழியில்,

"அந்தியு நண்பகலு மஞ்சுப தஞ்சொல்லி
முந்தியெ ழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தைப ராமரியாத் தென்றிரு வாரூர்புக்
கெந்தைபி ரானாரை யென்றுகொ லெய்துவதே?"

என்னும் தேவாரத்தைப் பாடிக்கொண்டு, தொண்டை நாட்டைக் கடந்து, சோழ நாட்டை யடைந்தார்.

சோழ நாட்டில் திருவாவடுதுறை முதலாயுள்ள தலங்களுக்குச் சென்று, இறைவரை யேத்திப் பாடிக் கண்ணிலாக் கவலையால் மிகவும் மனம் வருந்தித் திருத் துருத்திக்குப் போய்ச் சிவபெருமானை வணங்கித் தம் முடைய சரீரத்திற் பொருந்திய நோயைப் போக்கி யருள வேண்டுமென வேண்டினர். அப்பொழுது கட வுள், "கோயிலின் வடபுறத்திலுள்ள குளத்தில் மூழ்க, நின் நோய் அகலும்," எனக் கட்டளை யிட்டருள,

அதன்படி வன்றொண்டரும் அக்குளத்தில் மூழ்கினார். ஸ்நானம் செய்து வெளியேறலும், அவர் சரீரத்திலுள்ள நோய் நீங்கிற்று. சரீரமும், முன்போல் ஒளிபெற்று விளங்கியது. அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூரை யடைந்து, ஆலயத்துட் சென்று, வன்மீக நாதரை, "ஸ்வாமி, உம்மைத் தரிசிக்க ஒரு கண் போதாது. வலக்கண்ணையும் தந்தருளல் வேண்டும்," எனப் பிரார்த்தித்து,

"மீளா வடிமை யுமக்கே யாளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று
முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்க
ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்!
வாழ்ந்து போதீரே."

என்னும் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது வன்மீக நாதர் திருவுளமிரங்கி, வலக் கண்ணையும் தந்தருளினார். சுந்தரர் மட்டில்லா மகிழ்ச்சி யடைந்து, ஆடிப் பாடி, இரு கண்ணாலும் வன்மீக நாதரைக் கண்டு தரிசித்து, வலம் வந்து, தேவாசிரிய மண்டபத்தி லிருந்தார்.

15. தொண்டர் நாதரைத் தூது விடுதல்.

சுந்தர மூர்த்தி நாயனார் கோயிலுக்குட் சென்றிருந்த காலத்தில் அவருடைய பரிசனங்களிற் சிலர் பரவையார் வீட்டுக்குப் போகலாமென வெண்ணிச் சென்றனர். அவர்கள் அவர் வீட்டு வாயிலை நண்ணவும், அவர்களைப் பரவையார் அகத்துக்குள் நுழைய லாகாதெனத் தடுத்து விட்டார். ஏனெனில், சுந்தர மூர்த்தி நாயனார் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணம் செய்துகொண்டதனால், அவர்மீது சீற்றம் கொண்டே அவ்வாறு அவர் செய்தார். இவ்விவரத்தை அப்பரிசனங்கள் தேவாசிரிய மண்டபத்தி லிருந்த சுந்தரருக்குத் தெரிவித்தார்கள். அவர் அதனால் அளப்பரிய வருத்தமடைந்து, உலகவிஷயங்களில் அனுபவமுதிர்ச்சியுடைய சில பெரியோர்களைப் பரவையார் கொண்ட கோபத்தைச் சாந்தம் செய்து வரும்படி விடுத்தனர். அவர்களும் ஆங்குச் சென்று, கோபம் தவிர்ந்து, எப்பொழுதும்போலச் சுந்தரரோடு வாழ்ந்து வரும்படி பரவையாரை நயமாகவும் விநயகமாகவும் கேட்டார்கள். அவரோ, சிறிதும் இணங்கினாரில்லை. மேலும் மேலும் அவர்கள் வேண்ட, அவர், "எனக்கொரு குற்றம் புரிந்தார்க்குப் பரிந்து இனி நீங்கள் ஏதும் பேசுவீராகில், என் பிராணனை உங்கள் முன்னிலையில் மாய்த்துக்கொள்வேன்," எனக் கூறினார். அவர்கள் மேலே விளம்புதற்கிடமின்றி மீண்டு வந்து, சுந்தரர்பால் உற்றவை யனைத்தையும் ஓதினார்கள். சுந்தரர் கேட்டுத் துயரக் கடலுள் ஆழ்ந்து சோர்வுற்றிருந்தனர்.

இரவில் நேரமும் ஆயிற்று. அர்த்தஜாமவேளையும் வந்தடுத்தது. பரிசனங்கள் அனைவரும் நித்திரை போயினர். சுந்தரர் மாத்திரம் பரவையாரை நினைந்து நினைந்து ஏங்கி, நித்திரை கொண்டாரில்லை. அவர் பரமசிவனாருடைய திருவடிகளைத் தியானித்து, "ஸ்வாமி, நீவிரே பரவையை எனக்குக் கூட்டுவித்தீர். பின்பு நீரே சங்கிலியையும் மணக்கச் செய்தீர், அதனால்தான் பரவை கோபித்துள்ளாள். ஆகையால், நீவிர் நள்ளிரவாயினும், இப்பொழுதே சென்று அவள் கோபத்தைத் தீர்த்தருளல் வேண்டும்," எனப் பிரார்த்தித்தார். பரம கருணாநிதியாகிய பரமசிவனார் அவ்வர்த்த ஜாம வேளையில் சதுர் மறைகளாலும், பிரம்ம விஷ்ணுக்களாலும் காண முடியாத திருவடிகள் நிலத்திற்படியச் சுந்தரருக்கு வெளிப்பட எழுந்தருளி வந்தார். சுந்தரர் கண்டு ஆனந்தங் கொண்டு, பார்மிசை பணிந்தெழுந்து நின்றார். உமையொரு கூறுடையார், "சுந்தரா, யாதோ நிற்கு நிகழ்ந்தது? என வினவ, அவர் நேர்ந்தவை யனைத்தையும் நவின்றனர். பரமசிவனார், "தோழ, நின் கவலை ஒழிப்பாயாக. நினக்காக யாமே அவள்பால் தூது சென்று அவள் கோபத்தைத் தணித்து, நின் எண்ணத்தை முடித்து வைப்போம்," எனக் கூறித் தமக்குப் பூஜை செய்யும் அர்ச்சகர் வடிவத்தைத் தாங்கிக்கொண்டு, 'பரவையார் வீட்டுக்குச் சென்றார்.

அர்ச்சகர் வடிவத்துடன் அரனார் புறப்படவும், சகல சிவகணங்களும், முனிவரும், தேவரும் அவரைப் பின் பற்றி வந்தார்கள். அதனால், அத்திருவாரூர் சிவலோகமாகவே யிருந்தது. கடவுள் தம்மைப் பின்பற்றி

வந்தவர்களைப் புறத்திலே நிறுத்திவிட்டுத் தாம் மாத்திரம் பரவையார் வீட்டு வாயிலை யடைந்தார். கதவு தாழ் இட்டிருந்தது. ஆதலின், அவர் அங்கிருந்துகொண்டு, கதவைத் தட்டி, "பரவை, பரவை" என விளித்து, "கதவைத் திற," எனக் கூறினார்.

அதுவரை நித்திரை இல்லாது விழித்துக்கொண்டிருந்த பரவையார், "யார் இந்நேரத்தில்வந்து கதவைத் தட்டுகின்றவர்? நம் கோயில் அர்ச்சகர் குரல் போல இருக்கின்றதே! அவர் இந்த நள்ளிரவில் இங்குப்போதரக் காரணம் யாதோ?" எனப் பயந்து, பதைபதைத்து, வேகமா யோடிவந்து கதவைத் திறந்தார்; அர்ச்சகரைக் கண்டார்; அதிசயித்தார்; அவர் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்தார். "பெரியீர், நீவிர் இந்நேரத்தில் அடியேன் குடிலுக்கு எழுந்தருளிய காரணம் என்ன? ஏதேனும் விசேஷம் உண்டா? அடியேனால் ஆக வேண்டிய காரியம் ஏதும் உளதோ?" என இரந்து வணக்கத்தோடு கேட்டார்.

சிவபெருமான், "பரவையே, யான் ஒரு காரியமாக நின்னை நாடி வந்தேன். நீ அதனை மறுது செய்தல் வேண்டும்," என்றார்.

உடனே பரவையார், "ஸ்வாமி, அஃது என்னால் இயலுமேல், செய்தற்கு யாதும் ஐயமில்லை. விஷயம் யாது? விளம்புங்கள்," என்ன, சிவபெருமான், "சுந்தரமூர்த்தி பண்டுபோல இங்கு வருவதற்குநீ இசையவேண்டும்," என்றார்.

பரவையார் அது கேட்டு மிக்க கோபங் கொண்டு, "ஐயரே, நும்பெருமை அழகியது! என்னைத் தனியே

இங்கு விட்டுவிட்டுத் திருவொற்றியூரிற் போய்ச் சங்கிலி யால் கோட்பட்டார்க்கு இங்கொரு சார்பும் உண்டோ?'' எனக் கடிந்து பேசினார்.

அர்ச்சகர், ''நங்காய், சுந்தரமூர்த்தி நினக்கு எவ்வளவு குற்றம் செய்திருந்தபோதிலும், அதனை மனத்தில் வைக்காது, கோபம் நீங்கி, நீ அவரை யேற்கத் தான் வேண்டும். மறுப்பது நிற்குத் தகுதி யன்று,'' என்று கூறப் பரவையார் முன்னையினும் முனிந்து, ''ஐயரே, இதன்பொருட்டு நீர் இங்கு வருதல் உம்முடைய பெருமைக்கு இழுக்காகும். அவர் இங்கே வருதற்கு யான் சிறிதும் இணங்கேன். நீவிர் ஏகலாம்,'' என்று வெட்டெனப் பேசினார்.

அதைக் கேட்டுச் சிவபெருமான் முறுவலித்துக் கொண்டு, தம்முடைய திருவுருவத்தைப் பரவையார்க்குக் காட்டாது, மீண்டும் சுந்தரர்பால் வந்தடைந்தார். சுந்தரர், இறைவர் புன்னகையுடன் வருவதைக் கண்டு, தம் எண்ணத்தை முடித்திருப்பார் என எண்ணி, ''பரவை கோபத்தைத் தீர்த்தருளினீரோ?'' என, கடவுள், ''சுந்தரா, நாம் எவ்வளவோ நயந்து சொல்லிப் பார்த்தோம். அவள் இணங்கின ளில்லை,'' என்றார். சுந்தரர் அதுகேட்டு நடுக்கமெய்தி, ''ஸ்வாமி, உம்முடைய அடியவளாகிய பரவை உம்முடைய சொல்லை மறுப்பாளோ? அடியேன் அடிமைத் தன்மை உமக்கு வேண்டுவதில்லை போலும்! அங்ஙனமாயின், அன்று நீர் என்னை ஏன் ஆட்கொளல் வேண்டும்?'' என்று வருத்தத்தோடுரைக்க, ஈசர், ''சுந்தரா, வருத்தப்படாதே. மற்றும் ஒரு முறை நினக்காகப் பரவைபாற் சென்று, அவளைச்

சமாதானம் பண்ணி, நின்னை அவள் ஏற்கும்படி செய்வோம்,'' எனக் கூறித் தம்முடைய கணங்களோடு பரவையார் வீட்டுக்கு மற்றும் ஒரு முறை பயணமானார்.

இஃது இங்ஙனமாக, பரவையார் அவரும் தம்முடைய மாளிகைக்கு வந்து விட்டுப் போனபின் பிறகு உண்டான சில அதிசயங்களாலும், அற்புதநிகழ்ச்சிகளாலும் அர்ச்சகராக வந்து சென்றவர் சிவபெருமானே என உணர்ந்து, அளவற்ற துக்கத்தை அடைந்து, "அந்தோ! பேதையாகிய யான் பரமர் சொல்லை மறுத்தேனே!'' என வருந்தி, நித்திரை இல்லாது, "அவர் மற்றொரு முறை வாராரோ?'' என விழிபூத்து வழியைப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

அத்தருணம் சிவபெருமான் தேவர் முனிவர் முதலானவர்கள் தம்மைச் சூழ்ந்து வரத் தம்மைப் பரவையார் அறிந்துகொள்ளும்படியான திருக்கோலத்துடன் அங்கு வந்தடைந்தார். வழி பார்த்திருந்த பரவையார் அவரைக் கண்டு அதி சீக்கிரம் எழுந்துபோய் உபய சரணாரவிந்தங்களில் நமஸ்கரித்து நிற்க, இறைவர் அவரை நோக்கி, "பாவாய், எம் தோழனாகிய சுந்தரன் அனுப்ப, நாம் மறுபடியும் நின்னிடம் வந்தோம். நீ முன்போல மறுமல், அவன் நின்பால் வருதற்கு இசையத்தான் வேண்டும்,'' என்றார். பரவையார், "ஆண்டவரே. தாங்கள் முன்பு அர்ச்சகர் வடிவத்தோடு வந்தருளினீர்கள். அப்பொழுது பாவியேன் தாங்கள் இன்னாரென்பதை அறியாது போயினேன். இப்பொழுது இத்திருக்கோலத்துடன் வந்து காட்சி கொடுத்தருளிய அருட்டிறத்தை என்னெனப் புகழ்வேன்? அடியேன் புரிந்த

தவவே தவம்! தேவரீர் கட்டளை யிடுங்கால், அடியேன் இசையாது யாது செய்தல் கூடும்?'' என்றார்.

இறைவர் அது கேட்டு, "நங்காய், நன்று சொன்னாய்!'' எனக் கூறிப் பரவையார் வீட்டை விட்டகன்று சுந்தரரை நோக்கி வந்தார்.

இறைவர் வருகையை எதிர் பார்த்து நின்ற சுந்தரர் ஆண்டவர் மீண்டு வருவதைக் கண்டு, 'என்சொல்லு வரோ!' எனப் பயந்து, "ஜகத்ரக்ஷகரே, அடியேன் உயிர்தரிக்கும்படியான பதில் கொண்டுவந்துள்ளீரோ?'' என வினவ, கடவுள், "தோழ, நின்பொருட்டு நாம் ஏந்திழைபா லெய்தி, அவள் கோபத்தைத் தணித்து வந்தோம். இனி நீ வழக்கம்போல அவள் மாளிகைக்குப் போகலாம்,'' எனக்கூற, வன்றொண்டர் மகிழ்ச்சியடைந்தார். உடனே இறைவர் மறைந்தருளினார்; பரிசனங்களும் விழித்தெழுந்தார்கள். அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு சுந்தர மூர்த்தி நாயனார் பரவையார் வீட்டுக்குப் புறப்பட்டார்.

"இவ்வகை யிவர்வந் தெய்த
எய்திய விருப்பி னேடும்
மைவளர் நெடுங்கண் ணாரும்
மாளிகை யடைய மன்னுஞ்
செய்வினை யலங்கா ரத்துச்
சிறப்பணி பலவுஞ் செய்து
நெய்வளர் விளக்குத் தூபம்
நிறைகுடம் நிரைத்துப் பின்னும்,

"பூமலி நறும்பொற் சுண்ணம்
புனைமணிக் கோவை நாற்றிக்

காமர்பொற் சுண்ணம் வீசிக்
கமழ்நறுஞ் சாந்து நீவித்
தூமலர் வீதி சூழ்ந்த
தோகையர் வாழ்த்தத் தாமும்
மாமணி வாயின் முன்பு
வந்தெதி ரேற்று நின்றார்.''

பின்னர் இருவரும் பரமசிவனுருடைய திருவருட் செயலைப் போற்றிப் புகழ்ந்து, முன்போலவே ஐக்கியமாக இருந்து வாழ்ந்து வந்தனர்.

16. ஏயர்கோன் கலிக்காம நாயனுரைச் சந்தித்தல்.

தம்பிரான் தோழர் நாடோறும் வன்மிக நாதரைத் தரிசனம்செய்து, திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு, திருவாரூரில் பரவையாரோடு வாழ்ந்து வந்தார். அந்நாளில், சோழ நாட்டில், திருப்பெருமங்கலம் என்னும் ஊரில், வேளாளர் குலத்தில், சோழமன்னர்களிடம் பரம்பரையாகச் சேனுதிபத்தியம் பூண்டு வந்த ஏயர் குடியிலே, கலிக்காமர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமானே பரம்பொருளென எண்ணி வழிபட்டு வரும் சிவபக்தியிற் சிறந்தவர். திருப்புன்கூரிலுள்ள சிவாலயத்தில் அவர் அநேக திருப்பணிகள் செய்தவர். அவர், சுந்தரமூர்த்தி நாயனுர் சிவபெருமானைப் பரவையார் வீட்டுக்குப்பாதி ராத்திரியில் தூதனுப்பினுர் என்பதைக் கேள்வியுற்று, அளவு கடந்த கோபங் கொண்டு, "தேவ தேவரை இவ்வாறு தூதனுப்பலாமா! இவ்வண்ணம்

புரிந்தவனும் ஒரு தொண்டனுவனு! அவனை எம்மிறைவரும் ஆட்கொண்டாராமே! அந்தப் பெரும்பாதகனை யான் காண்பேனுயின், என்னுகுமோ!'' என்று இருந்தார். இச்சமாசாரத்தை அறிந்த சுந்தரர் அன்பருக்கெளியராகிய முக்கண் முதல்வரிடத்தில் இவ்விஷயத்தை விண்ணப்பம் செய்தார்.

சர்வஞ்ஞராகிய சிவபெருமான், அவ்விருவரையும் கூட்டுவிக்க வேண்டுமெனத் திருவுளங்கொண்டு, கலிக்காமரிடத்தில் சூலை நோயை ஏவினுர். அதுபோய் அவருடலைக் குடையலுற்றது. கலிக்காமர் அவ்வேதனையைப் பொறுக்க லாற்ருதவராய்ச் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு இருந்தார். அப்பொழுது சிவபெருமான் அவர் கனவிற்ருேன்றி, ''சுந்தரனுலன்றி இந்நோய் தீராது,'' எனக்கூறி மறைந்தார்.

கலிக்காமரோ, ''இந்நோய் என்னை வருத்தினும், வருத்துக. இதனுல், யான் மாண்டொழியினும், சால நன்று. மகாதேவரைப் பெண்ணுசை கொண்டு தூதனுப்பிய அப்பாதகனை யான் கண்ணெடுத்தும் பாரேன். அவன் என் உடலைத் தீண்டவும் பொறேன்,'' எனப் பிரதிக்கினை செய்து கொண்டிருந்தார்.

சிவபெருமான் சுந்தரரிடமும் சென்று, ''நாம் கலிக்காமன்பால் சூலை நோயை ஏவியுள்ளோம். அதனுல், அவன் வருந்துகின்ருன். நீ போய் அதனைத் தீர்ப்பாயாக,'' எனக் கட்டளையிட்டார்.

சுந்தரமூர்த்தி நாயனுர் அதனைக் கேட்டு, மகிழ்ந்து, கலிக்காம நாயனுருடைய சூலை நோயைத் தீர்த்தற்கு உடனே புறப்பட்டார். கலிக்காமர், ''சுந்தரர் வரு

கின்றார்," என்பதைக் கேள்வியுற்று, "எம்பெருமானைத் தூதனுப்பியவன் என் இல்லத்தில் வந்தெய்தும் முன்னர் என் வயிற்றைக் கிழித்துக்கொள்வேன்!" என உடைவாளை யெடுத்துத் தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு, மாண்டார். அத்தருணம் சுந்தரர் அவண் வந்தெய்தித் தாம் போந்துள்ள விவரத்தை ஆட்கள் மூலம் சொல்லி யனுப்பினார். கலிக்காமருடைய மனைவியார், "ஒருவரும் அழாதொழிக," எனக் கூறித் தம் கணவருடைய செய்கையை மறைத்து, சுந்தரரை எதிர் கொள்ளத் தம் சுற்றத்தார்களை அனுப்பினார். அவர்களும் சென்று சுந்தரரை வணங்கி அழைக்க, அவர் அவர்களுக்கு அருள் செய்து, மாளிகைக்குள் சென்றார். பின்பு அவர், "கலிக்காமர் எங்குள்ளார்? யான் அவரை வருத்தும் சூலை நோயை நீக்கி அவருடன் வாழ்வான் வந்தேன்," என்றார்.

கலிக்காமருடைய மனைவியார் ஏவலினால் வேலைக்காரர்கள், "ஸ்வாமி, அவருக்கு ஒரு விதத் தீங்குமில்லை. அவர் சுகமாக நித்திரை செய்துகொண்டிருக்கிறார்," என்றார்கள். சுந்தரர் அது கேட்டு, "அவருக்கு ஏதும் தீங்கில்லையாயினும், யான் அவரைப் பார்த்தல் வேண்டும்," என்று கூறி, கலிக்காமர் மாய்ந்து கிடந்த அறைக்குட் சென்றார்; ஆங்குக் கலிக்காமர் உதிரம் சோரக் குடர் சொரிந்து மாய்ந்து கிடந்ததைக் கண்டு, மனம் பொறாராய்த் தாமும் தம் உயிரை மாய்த்துக் கொள்ள உடை வாளை யெடுத்தார். உடனே சிவபெருமானுடைய திருவருளால் கலிக்காமர் உயிர் பெற்றெழுந்து, சுந்தரர் கை வாளைப் பிடித்துக்கொண்டார். இருவரும் ஒருவரை யொருவர் நமஸ்கரித்துக்கொண்டு,

அதிக நண்பு பூண்டாராய் அளவளாவி யிருந்தனர். பின்பு, சுந்தரர் கலிக்காம நாயனாரோடு திருப்புன்கூருக் குப் போய், இறைவரை வணங்கி,

"அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை! நீயெனை நமன்றமர் நலியில்,
'இவன்மற் றென்னடி யான்' என விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்போ ழிற்றிருப் புன்கூரு ளானே!"

எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். சுந்தரர் கலிகாம நாயனாரோடு சில நாள் வாழ்ந்திருந்து பின்பு அவருடன் திருவாரூருக்கு வந்து சேர்ந்தார்.

17. சேரமான் பெருமாள் சிநேகம் பெறுதல்.

கலிக்காம நாயனாரும் திருநாவலூரரோடு திருவாரூரில் சிலநாள் இருந்து, ஸ்வாமி தரிசனம் செய்து வந்தார். பிறகு அவர் தம்மூருக்குச் செல்ல வேண்டுமென நினைந்து, சுந்தரர்பால் விடை பெற்றுக்கொண்டு புறப் பட்டார். சுந்தரர், பின்பு திருநாகைக்காரோணம் போய்க் கடவுளை வழிபட்டுப் பொன்னும், மணியும், ஆடையும், ஆபரணமும், குதிரையும், உடைவாளும் பெற்று, இதர ஸ்தலங்களையும் வணங்கிக்கொண்டு, மீண்டும் திருவா ரூர் வந்தடைந்தார்.

அக்காலத்தில் சேர மண்டலத்தில் கொடுங்கோளூ ரில், சேரமான் பெருமாள் என்னும் ஓர் இராஜ குமாரர்

சைவ நெறி வாழும்படி அவதரித்தார். அவர் இளமையிலேயே ஜனன வைராக்கியம், தேக வைராக்கியம், ஐசுவரிய வைராக்கியம், பிரபஞ்ச வைராக்கியம், திரவிய வைராக்கியம், சங்க வைராக்கியம், ஸ்திரீ வைராக்கியம் போசன வைராக்கியம், பிரதிக்கிரக வைராக்கியம், தேகாதியாகிய சர்வ வஸ்துக்களில் வரும் வைராக்கியம் ஆகிய பத்துவகை வைராக்கியங்களில் பூர்வ ஜன்ம சிவாராதன புண்ணிய விசேஷத்தினாலே தேகாதி சர்வ வஸ்துக்களிலும் வரும் வைராக்கியத்தை உடையவராகிச் சிவபெருமானுடைய திருவடியை அடைய வேண்டுமெனக் கருதி, அரச குமாரர்க்குரிய எத்தொழிலும் புரியாது, திருவஞ்சைக் களத்தையடைந்து, சிவபெருமானை வழிபட்டு, திருநந்தன வனம் வைத்தல், பூக்கொய்தல், பூமாலை பாமாலை சூட்டல் முதலிய சிவ கைங்கரியமான பணிவிடைகளைப் புரிந்து வந்தார்.

அந்நாயனார் தில்லையின்கண் சிற்சபையில் ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளும் நடராஜ மூர்த்தியினுடைய சரணாரவிந்தங்களே தமக்குப் பெருந்திருவும், துணையும் ஆகும் என்று தெளிந்த உண்மை யறிவினாலே, அப்பாதாம்புயங்களை அன்புடன் பூஜித்து வருவா ராயினார். பூஜாந்தத்தில் சபா நாயகர் தமது திருச்சிலம்பொலியை அவர் கேட்கும்படி ஒலித்துக் காட்டுவார். ஒரு நாள் சேரமான் பெருமாள் நாயனார் தம் பூஜை முடிவில் அவ்வொலியைக் கேட்டாரில்லை. அதனால், அவர், "யான் யாது பிழை புரிந்தேனோ! சிலம்பொலி கேட்கவில்லையே! என் செய்வேன்!" என மனமாழ்கி, தம் உடைவாளை உருவித் தமது மார்

பிலே நாட்டச் சிலம்பொலி எழுந்தது. சேரமான் பெருமாள் வணங்கித் துதித்து, "எம்பெருமானே, இத்திருவருள் முன் செய்யா தொழிந்தது ஏன்?" என்ன,

"என்ற பொழுதி லிறைவர்தா
மெதிர்நின் றருளா தெழுமொலியான்,
'மன்றி னிடைநங் கூத்தாடல்
வந்து வணங்கி வன்றொண்டன்
ஒன்று முணர்வா னமைப்போற்றி
யுரைசேர் பதிகம் பாடுதலான்
இன்று கேட்டு வரத்தாழ்ந்தோம்,'
என்று ரவரை நினைப்பிப்பார்."

உடனே சேரமான் பெருமாள், "எம்மிறைவர் அடியார்களுக்கு அருளும் கருணை இருந்தவாறு என்னே!" என்று வியந்து, "அச்சுந்தர மூர்த்தி நாயனாரைக் கண்டு தரிசிக்கவேண்டும்" என நினைந்து, சேரநாட்டை விட்டுப் புறப்பட்டுச் சிதம்பரத்தை யடைந்து, கனக சபேசரை வணங்கிப் பொன் வண்ணத்தந்தாதி பாடிச் சில நாள் அங்கிருந்து, பின்பு அதை விட்டுப் புறப்பட்டு, வழியிலுள்ள தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாரூரை வந்தடைந்தார்.

சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனார் வருகையை யறிந்து, மகிழ்ச்சியுடன் அவரை எதிர் கொண்டார். அவரும் சுந்தரரைக் கண்டவுடன், அடியற்ற மரம் போலப் படிமிசை வீழ்ந்து, நமஸ்கரித்தார். சுந்தரரும் அவரை வணங்கினார். இருவரும் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டனர்; உள்ளங்கலந்து ஒருமித்த தோழ

ராயினர். அன்று முதல் சுந்தரரைச் சேரமான் தோழர் எனப் பலரும் அழைத்தனர். சுந்தரர் சேரமான் பெருமானைக் கையிற் பிடித்துக்கொண்டு, கோயிலுக்குட் சென்று, ஸ்வாமியை வணங்கிப் பரவையார் மாளிகைக்கு அழைத்துப் போய், அவருக்கும் ஏனைய பரிசனங்களுக்கும் விருந்து செய்து, அவரோடு அளவளாவிச் சிலநாள் அங்கிருந்தார்.

18. பாண்டிப்பதிகள் பரசுதல்.

சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தர மூர்த்தி நாயனாரும் திருவாரூரில் வாழ்ந்துவருங் காலத்தில், மதுரை முதலாயுள்ள பாண்டியநாட்டுத் தலங்களுக்குச் சென்று பரவுதல் வேண்டுமென அவாக்கொண்டு, இருவரும் திருவாரூரினின்று நீங்கிக் கீழ்வேளூர், திருநாகைக்காரோணம், வேதாரணியம், அகத்தியன்பள்ளி, குழகர்கோடி முதலான தலங்களுக்குச் சென்று, ஸ்வாமி தரிசனம் செய்து, தேவாரம் பாடிக்கொண்டு, சோழ நாட்டைக் கடந்து, பாண்டி நாட்டை அடைந்தனர்.

பாண்டி நாட்டில் திருப்புத்தூரை வணங்கி, மதுரையை யடுத்துவர, அவர்கள் வரவை யறிந்த பாண்டியனும், அவன் மகளை மணந்து அப்பொழுது அவண் போந்திருந்த சோழனும் அவ்விருவரையும் எதிர்கொண்டழைக்க, மதுரைக்கு வந்து, கோயிலுக்குட் சென்று, சோமசுந்தரக் கடவுளை வணங்கிப் பாண்டியனுய்த்த ஒரு மாளிகையில் இருந்து வந்தனர்.

சுந்தர மூர்த்தி நாயனார் தமிழ் நாட்டு வேந்தர் மூவரோடும் அங்கிருந்துகொண்டு, தினந்தோறும் ஸ்வாமி

தரிசனம் செய்து வந்தார். பின்பு மற்றைய பதிகளுக்குச் செல்ல வேண்டுமென வெண்ணி, மதுரையினின்று புறப்பட்டுத் திருப்பூவணம் சென்று, இறைவரை வணங்கிச் சில நாள் அங்கிருந்து, பின்பு மதுரைக்கு வந்தார். அவர் அங்கிருக்கும் நாளில், அடுத்துள்ள திருவாப்பனூர், திருவேடகம் முதலிய பதிகளுக்குச் சென்று, பரமரை வணங்கிப் பதிகம் பாடி வந்தார்.

பின்பு சுந்தர மூர்த்தி நாயனார் மூவேந்தரோடும் திருப்பரங்குன்றம் சென்று, ஸ்வாமி தரிசனம் செய்து, பாண்டியனையும், சோழனையும் மதுரைக்கு விடை கொடுத்தனுப்பிச் சேரர் பெருமானோடு அப்பதியினின்று நீங்கித் திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி முதலி பதிகளை வணங்கிக்கொண்டு, இராமேச்சரத்தை யடைந்து, இறைவரை யேத்தி, அங்கிருந்துகொண்டே ஈழ நாட்டி லுள்ள மாதோட்டத்துத் திருக்கேதீச்சரத்தை வணங்கி, வண்டமிழ்ப் பதிகம்பாடி, அங்கிருந்து புறப்பட்டுத் திருச்சுழியல் வந்தடைந்தார்.

தம்பிரான் தோழர் சேரர் பெருமானோடு திருச்சுழியலில் ஸ்வாமி தரிசனம் செய்து வாழ்ந்து வருங் காலத்தில், ஒரு நாள் ஸ்வாமி அவர் கனவில் காளை வடிவங் கொண்டு கையிற் பொற்செண்டும், முடியில் சுழியமும் உடையவராகத் தோன்றி, "நாம் இருப்பது கானப்பேர்," என்று சொல்லி, மறைந்தருளினார்.

சுந்தரர் விழித்தெழுந்து, இறைவர் திருவருளை வியந்து, சேரர் பெருமானிடம் தாம் கண்ட கனவின் மாண்பை யெடுத்துரைத்துத் திருச்சுழியலை நீங்கிக் கானப்பேர் சென்று, காளையாரை வணங்கிப் பதிகம்

பாடி, அதினின்றும் அரிதின் நீங்கித் திருப்புனவாயிலை யடைந்து, சேவித்துப் பாண்டிய நாட்டைக் கடந்து, சோழ நாட்டை யடைந்தார். வழியில் பாதாளீச்சரத்தைப் பாவிக்கொண்டு, திருவாரூரை யடைந்து, சுந்தரரும் சேரர் பெருமானும் வன்மீக நாதரை வணங்கிப் பரவையார் மாளிகையை யடைந்து, வாழ்ந்து வந்தனர்.

19. காவேரி வழி விடல்.

சுந்தரர் சேரமான் பெருமாளோடு திருவாரூரிலே வாழ்ந்து வருங் காலத்தில், சேரமான் பெருமாள் தம் தோழரைத் தம்முடைய ஊருக்கு வரவேண்டுமென அழைக்க, அவரும் அதற்கு இசைந்தார். உடனே இருவரும் வன்மீக நாதரை வணங்கி, விடை பெற்றுக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டுக் காவேரியின் தென் கரை வழியாகச் சென்றனர். வழியில் திருக்கண்டியூரை யடைந்து, இறைவரை யேத்திச் சென்றபோது, வடகரையில் எதிரே திருவையாறு தோன்ற, சேரர் பெருமான் சுந்தரரை நோக்கி, "குரு மணியே, அடியேன் மனம் ஐயாறுடைய கோவைத் தரிசிக்க அவாக் கொள்கின்றது," எனத் தெரிவித்தார். காவேரியோ, இரு கரையும் ஒரு கரையாக, ஓடங்களும் செல்ல முடியாதபடி பெருகி யோடியது. சுந்தரர் சேரமான் பெருமாள் மனோரதத்தைநிறைவேற்றி வைக்க வேண்டுமென நினைந்து, ஐயாறுடையாரைத் தியானித்துக்கொண்டு,

"பரவும் பரிசொன் றறியேனான்
பண்டே யும்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்,
எய்த நினைய மாட்டேனான்

கரவி லருவி கமுகுண்ணத்
தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்
தையா றுடைய வடிகளோ!''

எனத் தொடங்குந் திருப்பதிகத்தைப் பாடினார். அப்பொழுது இறைவர், கன்றொலி கேட்டுக் கதறும்கறவை போல, சராசரங்களெல்லாம் கேட்கும்படி, "ஓலம்," என்று சொல்லியருளினார். உடனே காவேரியும் பிரிந்து மேற்றிசையில் வெள்ளம் பளிங்குமலைபோல நிற்கக் கீழ் திசையில் வெள்ளம் வடிந்து, நடுவழிமணற்பரப்பாயிருந்தது. அதனைக்கண்ட அடியாரனைவரும்ஆனந்தங்கொண்டனர். இருவரும் உடன் வந்த பரிசனங்களுடன் அவ் வழியே சென்று, திருவையாற்றை யடைந்து, ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு, வந்தவழியே மீண்டும் தென் கரை வந்தடைந்தனர். பின்பு காவேரியும் முன்போல ஓடலாயிற்று. பின்பு, அவர்கள் மேற்றிசையை நோக்கி வழிக்கொண்டு, கொங்க நாட்டை யடைந்து, அதையும் கடந்து, மலை நாட்டிற் சென்று, ஆங்குள்ளார் எதிர்கொண்டழைக்கக் கொடுங்கோளூரை யடைந்தனர்.

20. வேடுவர் பறி.

சேரமான் பெருமாள் சுந்தரரைத் திருவஞ்சைக் களம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்துக்கு அழைத்துச் சென்றார். சுந்தர மூர்த்தி நாயனார் ஆங்குச் சென்று, ஸ்வாமிதரிசனம் செய்து, திருப்பதிகம் பாடினார். பின்பு அவரை யானைமேல் ஏற்றுவித்துச் சேரமான் பெருமாள்

யின் இருந்துகொண்டு, கவரி இரட்டி வந்தார். அரண்மனை வாயிலை யடையவும், இருவரும் கீழிறங்கிச் சேரர் பெருமான் குருமணியை உள்ளே அழைத்துக்கொண்டு போய், அரதனத்து அமைத்த அரியணைமிசை யமரச் செய்து, பாதார்ச்சனை பண்ணி, விருந்து செய்தார்.

திருநாவலூரர் சேரர் பெருமானோடும் அக்கொடுங் கோளூரில் வாசஞ் செய்துவரு நாளில், திருவாரூர் வன்மீக நாதரை நினைந்து,

> ''பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
> போக முந்திரு வும்புணர்ப் பானைப்
>
> பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
> பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
>
> இன்ன தன்மைய னென்றறி யொண்ணு
> எம்மா னையெளி வந்த பிரானை
>
> அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
> ஆரு ரானை மறக்கலு மாமே?''

என்னும் பதிகத்தைப் பாடித் திருவாரூருக்குச் செல்ல வேண்டுமெனச் சேரர்பிரானுக்குத் தெரிவித்தார். அவர் கேட்டுத் தோழரை விட்டுப் பிரிய மனமில்லாது மிகவும் வருந்தினர். ஆயினும், ஆசாரியர் எண்ணத்துக்கு விரோதமாக நடக்க மனமில்லாது, மந்திரிமார்களை அழைத்துத் தமது பண்டாரத்தைத் திறந்து சகல திரவியங்களையும் எடுத்துச் சுமையாட்களின் தலையிலேற்றிச் சுந்தரருக்கு முன் செல்லும்படி அனுப்ப ஆணையிட்டார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். சேரமான் பெரு

மாள் சுந்தரரோடு பின் பற்றிச் சென்று, வழியனுப்பி, விடை பெற்றுத் திரும்பினர்.

சுந்தரர் சேரநாட்டெல்லையை நீங்கி, வழியில் சுரங்களையும், நதிகளையும், வனங்களையுங் கடந்து, திருமுருகன் பூண்டி வழியாக வந்தார். அதன் சமீபமாகச் செல்லும் பொழுது பரமசிவனுர் தம்முடைய பூத கணங்களை அழைத்து, "நீங்கள் வேட வடிவங் கொண்டு சென்று, சுந்தரன் கொண்டுவரும் பண்டாரங்களைக் கவர்ந்து வாருங்கள்," என்று ஆக்ஞாபித்தார். அவர்களும் அவ்வாறே சென்று, "குத்துவோம்! வெட்டுவோம்! கொல்லுவோம்! கொணர்ந்த திரவியத்தைக் கொடுத்துப் போங்கள்," என்று சொல்லி, அவ்வாட்கள் சுமந்து வந்த திரவியங்களெல்லாவற்றையும் பறித்துக்கொண்டார்கள். அவர்களெல்லோரும் பயந்து நடுநடுங்கிச் சுந்தரர் பக்கம் போய்ச் சேர்ந்து, தாங்கள் சுமந்து வந்த நிதிக்குவியலைப் பறிகொடுத்த விருத்தாந்தத்தைத் தெரிவித்தார்கள். அவ்வேடுவர்களோ, சிவாக்ஞையின்படி சுந்தரர்பாற் சென்றிலர். சுந்தரர் திருமுருகன் பூண்டியிலுள்ள கோயிலுக்குட் சென்று, ஸ்வாமியை வணங்கி,

"கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமைசொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னெடும்
எத்துக்கிங் கிருந்தீ ரெம்பிரா னீரே!"

எனத் தொடங்குந் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே சிவபெருமான் திருவருளினால் அவ்வேடுவர்கள் தாங்கள் பறித்த திரவியங்கள் யாவற்றையும் கோயில் வாயிலில் கொண்டுவந்து குவித்தார்கள். சுந்தரர் அவற்றைக் கண்டு, ஸ்வாமியை வணங்கிச் சுமையாட்களை அவற்றையெடுத்து முன் செல்லும்படி செய்து, கொங்கநாட்டைக் கடந்து, திருவாரூர் வந்தடைந்தார்.

21. முதலை யுண்ட பாலனை அழைத்தல்.

சுந்தர மூர்த்தி நாயனார் திருவாரூரில் வாழ்ந்து வருங் காலத்தில், ஒரு நாள் சேரமான் பெருமானை நினைந்து, அவரைப் போய்ப் பார்க்கவேண்டுமென அவாக் கொண்டு உடனே திருவாரூரை விட்டு நீங்கிச் சோழ மண்டலத்தைக் கடந்து, கொங்க தேசத்தை யடைந்தார். அங்கே திருப்புக்கொளியூர் என்னும் ஊரில் ஒரு வீதி வழியே சென்றுகொண்டிருக்கும்பொழுது, ஒரு வீட்டில் மணவொலியும், மற்றொரு வீட்டில் அழுகை ஒலியும் கேட்டார். அவற்றின் காரணம் யாதென ஆங்குள்ள வேதியர்களைத் தம்பிரான் தோழர் வினவ, அவர்கள், "ஸ்வாமி, ஐந்து வயதுடைய பாலரிருவர் ஒரு குளத்தில் நீராடச் சென்றிருந்தனர். அவருள் ஒருவன் அக்குளத்தி லுள்ள முதலையால் விழுங்கப்பட்டான்; மற்றொருவன் உய்ந்து வந்தான். உய்ந்து வந்தானுக்கு இதுபோது இவ் வீட்டில் உபநயனம் நடக்கின்றது. அதற்குத்தான் இம் மங்கல வொலி. மற்றொரு வீட்டில் எழும் ஒலி மாண்ட மகனை நினைந்து அழும் ஒலி," என்றார்கள். அதைக் கேட்டுச் சுந்தரர் திருவுள மிரங்கி நின்றார்.

அத்தருணம் புதல்வனை இழந்த பெற்றோரிருவரும் தம்பிரான்றோழர் ஆங்கு எய்தியுள விவரத்தை யறிந்து, அவரைக் கண்டு தரிசிப்பான் வந்தடைந்து, வணங்கி நின்றனர். சுந்தரர் அவர்களைப் பார்த்து, இவர்களோ புத்திரனை இழந்தவர்கள்?'' என, அவர்கள், ''ஸ்வாமி, அது முன் நடந்ததொரு நிகழ்ச்சி. போனதை நினைத்துப் புலம்புவதால் வரும் பயன் யாது? தேவரீரைத் தரிசிக்க வேண்டுமென நெடுநாளாக அவாவி யிருந்தோம். இந்தப் பாக்கியம் இன்றே லபித்தது. இத்தினமே சுதினம்,'' என்றார்கள். திருநாவலூரர் அவ்விருவருடைய அன்பைக் கண்டு அவர்களுக்குத் திருவருள் பாலித்தல் வேண்டுமெனக் கருதி, அப்பிள்ளை இறந்த குளத்துக்கு அவர்களுடன் சென்றார். அவர் அவ்வாவிக் கரையை யடைந்து, அவிநாசியில் எழுந்தருளிய சிவபெருமானை நினைந்து, அச்சேயை முதலை கொண்டு வந்து தரும்படி,

''எற்றான் மறக்கே னெழுமைக்கு மெம்பெரு மானையே
யுற்றாயென் றுன்னையேயுள்குகின்றேனுணர்ந்துள்ளத்தாற்
புற்றா டரவா! புக்கொளி யூரவி நாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி யே !பர மேட்டியே!''

என்னும் பதிகத்தைப் பாடினார். அதில்,

''உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா! ஆதியு மந்தமு மாயினாய்!
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனை [யே.''

என்னும் நான்காம் திருப்பாசுரம் பாடி முடிதற்குமுன், காலன் அப்பிள்ளையின் உயிரைக் கொண்டுவந்து அக்

குளத்திலிருந்த முதலை வயிற்றினுள்ளே முந்தின தேகத்தை அத்துணை நாள்வரை அமையக் கூடிய வளர்ச்சியையும் உடையதாகத் தோற்றுவித்து, அதனுள்ளே புகுத்தி விட்டான். உடனே அக்கராவும் பிள்ளையைக் கரையிற் கொண்டுவந் துமிழ்ந்தது.

தேவர் அது கண்டு புஷ்ப வருஷம் பெய்தனர். பெற்றோர்கள் பிள்ளையைக்கண்டு பேரானந்தங்கொண்டு தம்பிரான்றோழர் திருவடியிற் சூழ்ந்து வணங்கினார்கள். சுந்தரர், அப்புதல்வனையும் பெற்றோர்களையும் உடன் அழைத்துக்கொண்டு, அவிநாசிக்குச் சென்று, கடவுளை வணங்கித் திரும்பி, அப்புதல்வன் வீட்டிற் சென்று, அவனுக்கு உபநயனம் செய்து வைத்தார்.

22. வெள்ளானை யேறி வெள்ளி வெற்படைதல்.

சுந்தர மூர்த்தி நாயனார் கொங்க நாட்டைக்கடந்து மலை நாட்டையடைந்தார். அவர்முதலைவாய்ப்பிள்ளையை மீட்ட விவரத்தைச் சிவனடியார்களிற் சிலர் சென்று சேரமான் பெருமாளுக்கு அறிவித்தனர். அவர் அது கேட்டு ஆனந்தக்கடலுள் மூழ்கி, அச்செய்தி சொன்னவர்களுக்கெல்லாம் பொன்னும் பொருளும் பொற்பார் தூசும் பொதுள அளித்தார். உடனே அவர்,

''செய்வ தொன்று மறியாது
சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்(து)'என்
ஐய னணைந்தான்! எனையாளும்
அண்ணல் அணைந்தான்! ஆரூரிற்

சைவ னணைந்தான்! என்றுணையாந்
தலைவ னணைந்தான்! தரணியெலாம்
உய்ய வணைந்தான்! அணைந்தான்!! என்
றேகை முரசஞ் சாற்றுவித்தார்.''

மேலும், நகர் முழுமையும் அலங்கரித்துச் சதுரங்க சேனையும், மதிநூல் வல்லாரும் புடைசூழ்ந்துவர, சேரர் பெருமான் தம் பட்டத்து யானைமேற்கொண்டு, நகர்ப் புறத்தே நண்ணி, நம்பியாரூரரை எதிர்பார்த்திருந்தார். தூரத்தே சுந்தரர் வருவதைக் கண்டவுடன், அவர் யானையினின்று மிறங்கி, நடந்து சென்று, அவருடைய கமலங்களை யொத்த உபய திருவடிகளில் விழுந்து, நமஸ்கரித்தார். சுந்தரரும் அவரை வணங்கப் பின்பு இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர்.

சேரமான் பெருமாள் சுந்தரரை யானைமீதேற்று வித்துத் தாம் பின்னிருந்துகொண்டு, வெண்கொற்றக் குடையை நிழற்றி வந்தார். நாநா வித வாத்தியங்க ளும் ஒலித்து வந்தன. அவர்கள் நகரினுட் சென்று, மாளிகை வாயிலை யடைந்தார்கள். உடனே சேரர் பெருமான் சுந்தரரை யானையினின்று மிறக்கி, அரண் மனைக்குள் அழைத்துச் சென்று, அரியாசனத்தில் அம ரச் செய்து, ஆராதித்தார். சுந்தரரும் அங்கே எழுந்த ருளியிருந்தார். அவர் அங்கிருந்துகொண்டு, மலை நாட்டி லுள்ள தலங்களை வணங்கி வந்தார்.

இப்படிப் பல நாட் சென்றபின், ஒரு நாள் சேர மான் பெருமாள் ஸ்நானம் செய்துகொண்டிருக்கும் பொழுது, சுந்தரர் திருவஞ்சைக்களத்தை யடைந்து, அங்கிருக்கின்ற கோயிலை வலம் வந்து, உள்ளே ஸ்வாமி

யை வணங்கித் தம்மை இப்பிரபஞ்ச வாழ்க்கையினின்றும் நீக்கித் திருவடியிற் சேர்த்துக்கொள்ள வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்பவராய்,

" தலைக்குத் தலைமாலை யணிந்ததென்னே!
சடைமேற்கங்கை வெள்ளந் தரித்ததென்னே!
அலைக்கும் புலித்தோல்கொண் டசைத்ததென்னே!
அதன்மேற் கதநாகங்கச் சார்த்ததென்னே!
மலைக்கு நிகரொப்பன வன்றிரைகள்
வலித்தெற் றிமுழங்கி வலம்புரிகொண்
டலைக்குங் கடலங்கரை மேன்மகோதை
யணியார்பொழி லஞ்சைக்க ளத்தப்பனே!"

என்னும் பதிகத்தை யோதிப் பிரார்த்தித்தார். உடனே வெள்ளியங்கிரியில் வீற்றிருந்தருளும் விமலராகிய சிவபெருமான், பிரமன் முதலிய தேவர்களை அழைத்து, "நீங்கள் சென்று நம் தோழனாகிய சுந்தரனை வெள்ளையானைமே லேற்றி இங்கு அழைத்து வாருங்கள்," என்று ஆஞ்ஞாபித்தார். அவர்களு மாஞ்ஞாணையைச் சிரமீது வகித்து, அவரை வணங்கி, அனுமதி பெற்றுத் திருவஞ்சைக்களத்தை யடைந்து, சுந்தரரை வணங்கிச் சிவபெருமான் அளித்த ஆஞ்ஞையை அறிவித்தார்கள். அவரும் ஸ்வாமியை வணங்கி, வெள்ளானை மேற்கொண்டு, ஐவகைக் கருவியும் ஆழிபோலக் கறங்கத் தோழராகிய சேரமான் பெருமானை மனத்தின்கண் நினைந்துகொண்டு வழிச்சென்றார்.

சேரமான் பெருமாள் ஸ்நானம் செய்து முடியவும், சுந்தரர் செய்கையை அறிந்து, அக்கணமே அருகில்

நின்ற அசுவத்தின்மே லேறிக்கொண்டு, திருவஞ்சைக் களத்துக்குப் போய், வெள்ளானை மேற்கொண்டு விண்ணிற் செல்லும் சுந்தர மூர்த்தி நாயனாரைக் கண்டு, தம்மைத் தாங்கியுள்ள குதிரையின் காதில் பஞ்சாக்ஷரத்தை ஓதினார். உடனே அஃது ஆகாயத்தில் பாய்ந்து, சுந்தரரை வலம் வந்து, அவருக்கு முன்னே சென்றது. சேரமான் பெருமாளுடைய படை வீரர்கள், தங்கள் அரசர் விண் சென்றதறிந்து, வீர யாக்கை பெற்று, அவருக்கு முற்பட்டு, அவரைச் சேவித்துச் சென்றார்கள்.

சேரமான் பெருமாளும் அவர் படைகளும் முன் செல்லப் பின் சென்ற சுந்தரர்,

"தானெனை முன்படைத் தானத றிந்துதன்
பொன்னடிக்கே
நானென பாடலந் தோ! நாயி னேனைப்
பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ளமத்த யானை
யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய் தானொடித் தான்மலை
யுத்தமனே."

எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடிக்கொண்டு, திருக்கைலையின் தெற்கு வாயிலை யடைந்தார். உடனே இருவரும் தத்தம் ஊர்தியினின்று மிறங்கிப் பல வாயில்களையும் கடந்து, திருவணுக்கன் திருவாயிலை யடைந்தனர்.

அங்கே சேரமான் பெருமாள் தடைபட்டு நிற்கச் சுந்தரர் மாத்திரம் உள்ளே சென்று, ஸ்வாமி சந்நிதானத்தில் நமஸ்கரித்து, எழுந்து நின்று, தோத்திரம் செய்தார்.

சிவபெருமான் அது கண்டு, அகமகிழ்ந்து அன்பு ததும்பிச் "சுந்தரா, வந்தாயோ!" என்றார்.

"அடிய னேன்பிழை பொறுத்தெனை
யாண்டுகோண் டத்தொடக் கினைநீக்கி
முடிவி லாநெறி தரும்பெருங்
கருணையென் தரத்ததோ வெனமுன்னர்ப்
படியு நெஞ்சொடு பன்முறை
பணிந்தெழும் பரம்பரை யானந்த
வடிவு நின்றது போன்றின்ப
வெள்ளத்து மலர்ந்தனர் வன்றொண்டர்."

மேலும், "ஸ்வாமி, தம் திருவடி அடையச் சேரமான் பெருமாள் திருவணுக்கன் வாயிலில் நின்றுளார்," என்று விண்ணப்பித்தார். உடனே இறைவர் அவரை உள்ளே அழைப்பித்து, அவர்களிருவரையும் சிவகணங்களுக்குத் தலைவர்களா யிருக்கும்படி அருள் செய்தார். சுந்தரர் பரமபதியை வணங்கித் தாம் முன் செய்து வந்த திருத்தொண்டை ஆலால சுந்தரராகிப் புரிந்து வந்தார். சேரமான் பெருமாள் கண நாதராக இருந்தார்.

சுந்தரரோடு பூமியில் அவதரித்திருந்த பரவையாரும், சங்கிலியாரும் முறையே கமலினியாரும் அநிந்திதையாருமாகிப் பார்வதி தேவியாருக்கு முன்போல் தொண்டு செய்து வந்தனர். சுந்தரர் தாம் வழியில் பாடிய தேவாரத்தை ஆங்கே அவரடிவணங்கி நின்ற வருணனிடம் கொடுக்க, அவன் அதைத் திருவஞ்சைக் களத்திலே பயபக்தியுடன் உய்த்துத் தெரிவித்தான்.

"என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்."

நம்பியாண்டார் நம்பி
அருளிச் செய்த

திருத்தொண்டர் திருவந்தாதி.

செந்நீர் வயன்முது குன்றினிற் செந்தமிழ்
பாடிவெய்ய
மழுநீள் தடக்கைய னீந்தபொன் னுங்குக்கோள்
ளாதுவந்தப்
பழுநீர் மருதிரு வாரூரில் வாசியும்
பொன்னுங்கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு வாரூர னென்றுநாங்
கேட்பதுவே.

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர்
அருளிச் செய்த

திருத்தொண்டர் புராண சாரம்.

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனய னாராய்
மண்புகழ வருட்டுறையா னோலைகாட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய வாரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோ ணயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்லை ழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச் [செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற்றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பிறனித் தூதுவந்தா றாடு கீறி
யுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னாரே.

——(o)——

புதிய பிரசுரங்கள்.

அமெரிக்காவின் மூன்று பெருமக்கள்		....	0—10—0
மனோன்மணீயம்	....	....	0—10—0
முப்பெரும் நண்பர்கள்	....	....	0— 8—0
இராமாநுஜர் சரித்திரம் படங்களுடன்		....	0—10—0
தம்பிரான்றேழர்	....	....	0—10—0
மணிமேகலை	....	....	0— 8—0
அபிமன்னன் வெற்றி	....	....	0— 6—0
கதைமணிக் கோவை	....	....	0— 5—0
பண்டைச் சிறு கதைகள்	....	....	0— 6—0
தமிழ்ப் புலவர் வரலாறு முதல் பகுதி		....	0—10—0
ஷை 2ம், 3ம் பகுதி தனித்தனி		....	0— 8—0
ஸ்ரீ கிருஷ்ணன் தூது வசனம்		....	0— 4—0
பாண்டிய மன்னர் சரிதம் முதல் பாகம்		....	0—10—0
ஷை இரண்டாம் பாகம்		....	0— 8—0
மேகநாதன் அல்லது உத்தம புத்திரன்		....	0— 8—0
பாண்டவ வீரர்கள்	....	....	0— 8—0
அறிவு விளக்கக்கதைகள் முதல் பாகம்		....	0— 8—0
ஷை இரண் [illegible]			[illegible]
ஷை மூ [illegible]			[illegible]
சுந்தரர்			[illegible]
சாவித்திரி தேவி			[illegible]
பத்மினி			[illegible]
மனோரமை			[illegible]
நளன் சரிதை			[illegible]
சிறுவர் பொக்கிஷம்			[illegible]
கதாமணி மகுடம்			[illegible]
சிறுவர் கதைகள்			[illegible]
மௌரிய சக்கரவர்த்தி			[illegible]
நமது நாட்டுக் கதைகள்	....	....	[illegible]

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புத்தக வியாபாரம்,

ஸ்ரீ கோபால் மஹால் வடக்குச் சித்திரைவீதி, மதுரை.